




dinakani2023@gmail.com

RNI-TNTAM/2023/88253

# நமது தினகனி

NAMADHU DHINA KANI

www.dhinakani.com

காலை நாளிதழ்








| Vol: 02 | Issue: 311 | 4 Pages | 6.6.2025 | Friday | Price Rs. 6 | Annual Subscription Rs: 1825 |
|---|---|---|---|---|---|---|
| மலர்: 02 | இதழ்: 311 | 4 பக்கங்கள் | 6.6.2025 | வெள்ளிக்கிழமை | விலை ரூ.6 | வருட சந்தா ரூ.1825 |




**இறந்தார் இறந்தா ரனையர் சினத்தைத்**
**துறந்தார் துறந்தார் துணை**

**விளக்கம்:**
**சினத்தில் அளவு கடந்து சென்றவர் இறந்தவரைப்போன்றவர்,சினத்தைஅடியோடு துறந்தவர் துறந்தவர்க்கு ஒப்பாவர்.**

## கனடாவில் துப்பாக்கி சூடு: ஒருவர் பலி; 5 பேர் காயம்



டொரண்டோ, ஜூன் 6

கனடாவின் டொரண்டோ நகரில் லாரன்ஸ் ஹைட்ஸ் பகுதியில் ஜக்காரி கோர்ட்டு மற்றும் பிளெமிங்டன் சாலையருகே திடீரென துப்பாக்கி சூடு நடத்தப்பட்டது. இந்த தாக்குதலில், ஒருவர் பலியானார். ஒரு பெண் மற்றும் 4 ஆண்கள் என 5 பேர் காயமடைந்தனர். அவர்கள் மீட்கப்பட்டு, சிகிச்சைக்கு கொண்டு செல்லப்பட்டனர்.

எனினும்,துப்பாக்கி குண்டுகாயங்களால் அவர்களின் உயிருக்கு அச்சுறுத்தல் எதுவும் இல்லை என மருத்துவர்கள் தெரிவித்தனர். இந்த சம்பவத்தில் பாதிக்கப்பட்டவர்கள் 18 முதல் 40 வயதுக்கு உட்பட்டவர்கள் ஆவர்.

இதில் பல்வேறு நபர்கள் மீது சந்தேகம் எழுந்துள்ளது. ஆனால், அவர்களை பற்றிய விவரங்களை வெளியிட முடியாது என போலீசார் தெரிவித்தனர். அவர்கள் வாகனங்களில் தப்பினரா? அல்லது நடந்து சென்றனரா? என்றோ அல்லது துப்பாக்கி சூடு நடத்தப்பட்டதற்கான காரணம் என்னவென்றோ போலீசார் தெரிவிக்கவில்லை. ஆயுதங்கள் எதுவும் கைப்பற்றப்படவில்லை.

இந்த சம்பவத்திற்கு டொரண்டோ மேயர் ஒலிவியா சோவ் வருத்தம் தெரிவித்து உள்ளார். எனினும், சம்பவ பகுதியில் இருந்து பல வாகனங்கள் விரைவாக சென்றன என அந்த பகுதியை சேர்ந்த நபர் ஒருவர் கூறியுள்ளார்.

## திருமணம் கடந்த உறவு; இந்தோனேசியாவில் காதல் ஜோடிக்கு பொதுவெளியில் 100 சவுக்கடி தண்டனை

ஜகார்ட்டா, ஜூன் 6

இந்தோனேசியாவில் கடந்த 2022ம் ஆண்டு மேற்கொள்ளப்பட்ட சட்டத்திருத்தத்தின்படி, திருமணம் கடந்த உறவு வைத்துக் கொள்வது தடை செய்யப்பட்டது. குறிப்பாக இந்தோனேசியாவின் ஆசே மாகாணத்தில், இஸ்லாமிய ஷரியா சட்டத்தின்படி திருமணமாகாத ஜோடி பாலியல் உறவு கொள்வது சட்டவிரோதமாகும்.

இந்த நிலையில், திருமணம் கடந்த உறவில் ஈடுபட்ட குற்றச்சாட்டிற்காக பண்டா ஆசே நகரில் ஒரு காதல் ஜோடிக்கு பொதுவெளியில் 100 சவுக்கடி தண்டனை வழங்கப்பட்டுள்ளது. இதுதவிர சூதாட்டம், மது அருந்துதல் உள்ளிட்ட குற்றங்களுக்காக மேலும் 3 பேருக்கு மொத்தம் 49 சவுக்கடிகள் தண்டனையாக வழங்கப்பட்டது.

தண்டனை வழங்கப்படும் சமயத்தில் மருத்துவ உதவிகள் தயார் நிலையில் வைக்கப்பட்டிருந்தன. சவுக்கடி தண்டனை வழங்குவதன் மூலம் குற்றம் இழைத்தவர்கள் தங்கள் தவறை உணர்ந்து திருந்துவதற்கான வாய்ப்பு வழங்கப்படுவதாக பண்டா ஆரேநகரமேயர் இலிசாஜமால் தெரிவித்துள்ளார். அதே சமயம், இந்தோனேசியாவில் உள்ள மனித உரிமை அமைப்புகள் இந்த தண்டனையை கடுமையாக விமர்சித்து வருவது குறிப்பிடத்தக்கது.

## பிரான்ஸ் அதிபரின் மெழுகு சிலை திருட்டு




பாரீஸ், ஜூன் 6

உக்ரைன்மீதுரஷியாதொடர்ந்து தாக்குதல் நடத்தி வருகிறது. இதனிடையே,ரஷியாவுடன்பிரான்ஸ் பொருளாதாரஉறவைக்கண்டித்து கிரீன்பீல் என்ற அமைப்பின் ஆதரவாளர்கள் போராட்டத்தை நடத்தி வருகின்றனர். மேலும், ரஷியாவுடன் அணுசக்தி ஒப்பந்தத்தை முழுமையாகதுண்டிக்காத பிரான்ஸ் அதிபர் இமானுவல் மேக்ரானுக்கு எதிர்ப்பு தெரிவித்து வருகின்றனர்.

இதன் ஒரு பகுதியாக, கிரெவின் அருங்காட்சியகத்தில் வைக்கப்பட்டிருந்த பிரான்ஸ் அதிபர் மேக்ரானின் மெழுகு சிலையை போராட்டக்காரர்கள் திருடிச் சென்றதாக கூறப்பட்டது. இதன் மதிப்பு ரூ.40 லட்சமாகும். இது குறித்து தகவல் அறிந்து சென்ற போலீசார், சிலையை மீட்டு மீண்டும் அருங்காட்சியகத்திடம் ஒப்படைத்தனர்.

## காசாவில் இஸ்ரேல் அதிரடி தாக்குதல்; 55 ஆயிரத்தை நெருங்கும் பலி எண்ணிக்கை



காசா சிட்டி, ஜூன் 6

காசா முனையை நிர்வகித்து வரும் ஹமாஸ் ஆயுதக்குழுவினர் கடந்த 2023ம் ஆண்டு அக்டோபர் 7ம் தேதி இஸ்ரேலுக்குள் புகுந்து பயங்கரவாத தாக்குதல் நடத்தினர். இந்த தாக்குதலில் 1,139 இஸ்ரேலியர்கள் கொல்லப்பட்டனர். மேலும், இஸ்ரேலில் இருந்து 251 பேரை பணய கைதிகளாக காசா முனைக்கு ஹமாஸ் கடத்தி சென்றது.

இதையடுத்து, ஹமாஸ் ஆயுதக்குழு மீது போர் அறிவித்த இஸ்ரேல் காசா முனையில் அதிரடி தாக்குதல் நடத்தி வருகிறது. அதேவேளை, பணய கைதிகளில் பலரை ஒப்பந்த அடிப்படையிலும், ராணுவ நடவடிக்கை மூலமும் இஸ்ரேல் மீட்டுள்ளது.

பணய கைதிகளில் சிலர் ஹமாஸ் ஆயுதக்குழுவினரால் கொல்லப்பட்ட நிலையில் அவர்களின் சடலங்களும் மீட்கப்பட்டுள்ளன. தற்போதைய நிலவரப்படி, ஹமாஸ் ஆயுதக்குழுவின் பிடியில் இன்னும் 58 பேர் பணய கைதிகளாக உள்ளனர். இதில் 25க்கும் மேற்பட்டோர் உயிரிழந்துள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

அதேவேளை, காசா முனையில் இஸ்ரேல் ஓராண்டுக்குமேல் தொடர்ந்து தாக்குதல் நடத்தி வருகிறது. இந்நிலையில், காசா முனையில் இஸ்ரேல் நடத்தி வரும் அதிரடி தாக்குதலில் பலி எண்ணிக்கை 55 ஆயிரத்தை நெருங்கியுள்ளது. காசாவில் இஸ்ரேல் இன்று நடத்திய வான்வழி தாக்குதலில் 26 பேர் உயிரிழந்துள்ளனர். இஸ்ரேல், ஹமாஸ் இடையேயான போரில் காசாவில் ஹமாஸ் ஆயுதக்குழுவினர் உள்பட இதுவரை உயிரிழந்தோர் எண்ணிக்கை 54 ஆயிரத்து 510 ஆக அதிகரித்துள்ளது.

# மக்கள்தொகை கணக்கெடுப்பை 2027க்கு தள்ளிப்போட்டு பா.ஜ.க. சதி: முதல்வர் மு.க. ஸ்டாலின் குற்றச்சாட்டு

சென்னை ஜூன் 6

இரண்டு கட்டங்களாக 2027ம் ஆண்டு மார்ச் 1ம் தேதி முதல் சாதி வாரி கணக்கெடுப்புடன் மக்கள் தொகை கணக்கெடுப்பு நடத்தப்படும் என்று மத்திய அரசு அறிவித்துள்ளது. இந்த நிலையில் மக்கள் தொகை கணக்கெடுப்பை 2027ம் ஆண்டுக்குத் தள்ளிப்போட்டு, நாடாளுமன்றத்தில் தமிழ்நாட்டின் பிரதிநிதித்துவத்தைக் குறைக்கும் சதித்திட்டத்தை பா.ஜ.க. வெளிப்படையாக அறிவித்துள்ளது என்று முதல்அமைச்சர் மு.க. ஸ்டாலின் கூறியுள்ளார்.



இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள பதிவில், "2026ம் ஆண்டுக்குப் பிறகு நடத்தும் முதல் மக்கள் தொகைக் கணக்கெடுப்பைத் தொடர்ந்து, தொகுதி மறுவரையறை செய்ய வேண்டும் என அரசியலமைப்புச்சட்டம்கூறுகிறது. மக்கள்தொகைகணக்கெடுப்பை 2027ம் ஆண்டுக்குத் தள்ளிப்போட்டு, நாடாளுமன்றத்தில் தமிழ்நாட்டின் பிரதிநிதித்துவத்தைக்குறைக்கும் சதித்திட்டத்தை பா.ஜ.க. வெளிப்படையாக அறிவித்துள்ளது.

தொகுதி மறுவரையறை ஆபத்து குறித்து முன்பே நான் எச்சரித்திருந்தேன். அது இப்போது நிருபணமாகிவிட்டது. பா.ஜ.க.வுடன் கூட்டு சேர்ந்துள்ளதன் மூலம், பழனிசாமி இந்தச் சதித்திட்டம் பற்றிப் பேசாமல் அமைதி காப்பதோடு,இந்தத்துரோகத்துக்குத் துணைபோகிறவராகவும் இருக்கிறார். டெல்லி ஆதிக்கத்தின் முன் அவர் அடிபணிந்துவிட்டது இப்போது தெள்ளத் தெளிவாகியுள்ளது.

நியாயமான தொகுதி மறுவரையறை எனும் கோரிக்கையில் தமிழ்நாட்டு மக்கள் ஒன்றுபட்டு நிற்கிறோம்! மத்திய அரசு எங்களுக்குத் தெளிவான விளக்கத்தை அளித்தாக வேண்டும்!" என்று தெரிவித்துள்ளார்.

## RCB வெற்றிக் கொண்டாட்டத்தில் திருப்பூர் பெண் உயிரிழப்பு! வெளியான அதிர்ச்சி தகவல்



ஐபிஎல் இறுதிப் போட்டியில் பஞ்சாப் கிங்ஸ் அணியை 6 ரன்கள் வித்தியாசத்தில் வீழ்த்தி பெங்களூரு அணி வெற்றி கோப்பையை வென்றது.

18 ஆண்டுகளுக்குப் பின்னர் முதல்முறையாக பெங்களூரு அணி கோப்பையை வென்றுள்ளதால் அந்த அணியின் ரசிகர்கள் உற்சாகத்தில் துள்ளிக்குதித்தனர். அது மட்டுமல்லாமல் கர்நாடகா மாநிலமே தீபாவளி போல் எங்கும் வாண வேடிக்கையாக இருந்தது.

கூட்ட நெரிசலில் சிக்கி 11 பேர் பலி

இதையடுத்து பெங்களூரு அணி நிர்வாகம் சார்பில் பெங்களூரு சின்னசாமி கிரிக்கெட் மைதானத்தில் பாராட்டு விழாவுக்கு ஏற்பாடு செய்யப்பட்டது. இதனால் வீரர்களை காணும் ஆர்வத்தில் சிறுவர், சிறுமிகள், இளம்பெண்கள் என குடும்பத்தினருடன் பல்லாயிரக்கணக்கானோர் குவிந்தனர். இதனால் ஏற்பட்ட கூட்ட நெரிசலில் சிக்கி 11 பேர் உயிரிழந்தனர். 20க்கும் மேற்பட்டோர் காயமடைந்து மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

ரூ.10 லட்சம் நிவாரணம்

இந்த சம்பவத்திற்கு கர்நாடகாவில் ஆளும் காங்கிரஸ் கட்சியை எதிர்கட்சிகள் கடுமையாக விமர்சித்து வருகின்றனர். இறந்தவர்கள் குடும்பத்திற்கு ரூ.10 லட்சம் நிவாரணம் அறிவிக்கப்பட்டுள்ளது. இந்த சம்பவம் தொடர்பாக தீவிர விசாரணை நடைபெற்று வருகின்றது. இந்நிலையில் பெங்களூருவில் நேற்று நடந்த கொண்டாட்டத்தின்போது கூட்ட நெரிசலில் சிக்கி 11 உயிரிழந்த நிலையில் அவர்களது விவரம் வெளியாகியுள்ளது.

இதில், ஒருவர் தமிழ்நாட்டைச் சேர்ந்தவர் என்ற தகவல் வெளியாகியுள்ளது.

தமிழக பெண் உயிரிழப்பு

பெங்களூருவில் நடந்த ஆர்.சி.பி. வெற்றிப் பேரணியின் போது கூட்டநெரிசலில் சிக்கி திருப்பூர் மாவட்டம் உடுமலைப் பேட்டை தனியார் பள்ளி தாளாளர் மூர்த்தி என்பவரின் மகள் எம்.ஆர்.காமாட்சி உயிரிழந்த அதிர்ச்சி தகவல் வெளியாகியுள்ளது. இவர் அமேசான் நிறுவனத்தில் பணியாற்றி வந்துள்ளார். இவரது உடல் பிரேத பரிசோதனைக்காக்கு பிறகு பெற்றோர்களிடம் ஒப்படைக்கப்பட்டு உடுமலைப்பேட்டை கொண்டுவரப்படுகிறது .

## சென்னை: திருமாவளவனுக்கு உடற்பயிற்சி கற்றுத் தரும் ஜாகுவார் தங்கம் - தினசரி ஒழுங்கு திட்டம்



சென்னை, ஜூன் 6

விடுதலைச் சிறுத்தைகள் கட்சி தலைவர் திருமாவளவன், தனது அன்றாட முறையில் உடற்பயிற்சிக்கு முக்கியத்துவம் அளித்து வருகிறார். இந்நிலையில், இன்று காலை முன்னாள் வல்லுநர் 'ஜாகுவார் தங்கம்' அவர்களால் நேரில் பயிற்சி பெற்றது குறிப்பிடத்தக்கது.

பயிற்சியின் போது தலையாய உடல் தளர்ச்சி, வியர்வை எடுப்புப் பயிற்சி மற்றும் நுண்ணறிவு பரிசோதனைப் பயிற்சிகளும் நடத்தப்பட்டன. இது குறித்து கூறிய ஜாகுவார் தங்கம்,

> "திருமாவளவன் அவர்கள் மிகவும் ஒழுங்காக உடற்பயிற்சியை மேற்கொள்கிறார். அவருடைய உற்சாகமும் ஒழுங்கும் இன்றைய தலைமுறைக்கு ஒரு முன்னுதாரணம்" எனக் குறிப்பிட்டார்.

தற்போது அவரது தினசரி உடற்பயிற்சி ஒழுங்கு சமூக ஊடகங்களில் கவனத்தை ஈர்த்து வருகிறது. உடல் நலமே உயிரின் நலமென்கிற நம்பிக்கையில், நாடாளுமன்றத்திலும் சமூக சேவையிலும் தீவிரமாக இருப்பதற்கான ஓர் உடல் மற்றும் மன ஒத்துழைப்பு இவ்வாறு உருவாக்கப்படுகிறது.

## அரைவேக்காடு தவெக தொண்டர்கள்.. விஜயிடம் மன்னிப்பு கேட்க வேண்டுமா? கொந்தளித்த வேல்முருகன்!

சென்னை

ஒரு மணி நேரம் 40 நிமிடங்கள் பேசிய எனது பேச்சை முழுமையாக கேட்காமல், நான் மன்னிப்பு கேட்க வேண்டும் என்று தமிழக வெற்றிக் கழக தொண்டர்கள் சொல்ல கூடாது என்று தவாக தலைவர் வேல்முருகன் பதில் அளித்துள்ளார். எனது உரையில் விஜயை கொஞ்சம் கூட விமர்சிக்காத போது, அரைவேக்காடுகளை வைத்து பேச வைப்பது நாகரீக அரசியலுக்கு அழகல்ல என்று வேல்முருகன் கூறியுள்ளார்.

பாமக நிறுவனர் ராமதாஸை தமிழக வாழ்வுரிமை கட்சியின் தலைவர் வேல்முருகனின் சகோதரர் திருமால்வளவன் சந்தித்தார். இதனால் திமுக கூட்டணியில் இருந்து தமிழக வாழ்வுரிமை கட்சி விலகுகிறதா என்று கேள்வி எழுந்தது. இந்த நிலையில் செய்தியாளர்களை சந்தித்து வேல்முருகன் பேசுகையில், 25 ஆண்டுகளுக்கு மேலாக பாமகவுக்காக உழைத்துள்ளோம்.

ராமதாஸ் தான் எங்களை வழிநடத்தினார். பாமக மூலமாக 2 முறை எம்எல்ஏவாக செயல்பட்டுள்ளேன். அந்த அடிப்படையில் பாமகவில் ராமதாஸ் மற்றும் அன்புமணி இடையிலான கருத்து முரண்பாடு ஏற்பட்டுள்ளது. இதனால் மனம் வருந்தி அவர் கண்ணீர் சிந்தியதால், நாங்கள் வருத்தம் அடைந்தோம். பாமகவில் ஏற்பட்டுள்ள குழப்பங்கள் தீர வேண்டும் என்று மனதார விரும்புகிறோம்.

மனவருத்தத்தில் இருந்ததால், எனது சகோதரர் ராமதாஸ்க்கு ஆறுதல் கூறி வந்துள்ளார். அதேபோல் அன்புமணியும் என்னை தொடர்பு கொண்டு பேசினார். அண்ணனான அன்புமணி கடந்த கால கசப்பை மறந்து, எப்போது வேண்டுமானாலும் என்னுடன் பேசலாம் என்று கூறினார். அனைத்து கட்சி கூட்டம், என் எல்சி கூட்டத்தின் போதும் அன்புமணி வாஞ்சையுடன் பேசி இருக்கிறார்.

அவர்கள் இருவரும் எங்களுடன் மீண்டும் பேசிய மன நிம்மதியை அளிக்கிறது. இதன் காரணமாகவே பாமக, அன்புமணி உள்ளிட்டோரை விமர்சிப்பதை தவிர்த்து சூமுக அரசியலில் ஈடுபட்டு வருகிறேன். ஒருபோதும் பாமகவில் இணையப் போவதில்லை என்று தெரிவித்தார். தொடர்ந்து விஜய் மீதான கொச்சையான விமர்சனம் குறித்த கேள்விக்கு, 35 ஆண்டு காலம் திரையில் நடித்துவிட்டு அரசியலுக்கு வந்துள்ளார். பெற்றோர் தங்களின் குழந்தைகளை சினிமாக்காரர்களுடன் அதிக நெருக்கம் காட்ட அனுமதிக்க கூடாது என்று கூறினேன். சில வாழும் காமராசர் என்றெல்லாம் பேசினார்கள். அதற்கு பதில் சொல்வதை போல், காமராசரை விஜய் உடன் ஒப்பிடுவதை விமர்சித்தேன். கலையை கலையாகவும், நடிகரை நடிகராக மட்டுமே பார்க்க வேண்டும்.

சுமார் ஒரு மணி நேரம் 40 நிமிடங்கள் பேசிய எனது உரையை முழுமையாக கேட்காமல், சில அரைகுறை வேட்காடுகள், என்னை மன்னிப்பு கேட்க அறிக்கையிடுவது எல்லாம் இங்கு வேண்டாம். வேல்முருகன் மன்னிப்பு கேட்க வேண்டும் என்று சொல்வது, யூட்யூப் மூலம் பேசவைப்பதெல்லாம் நிறுத்தி கொள்ள வேண்டும்.. விஜயை ஒரு வார்த்தை கூட விமர்சிக்கவில்லை. விஜய்க்கு நீங்கள் இன்று ரசிகர்களாக இருக்கலாம்.

என் கள அனுபவம் 40 ஆண்டு காலம். நேற்று பெய்த மழையில் இன்று முழைத்த காளான்கள். தமிழக அரசியல் வரலாறு தெரியாவர்களை விஜய் பேச அனுமதிக்க கூடாது. நான் தவறாக பேசி இருந்தால், பத்திரிகையாளர்களை சந்தித்து விஜய் கேட்கவேண்டும்.. அதைவிடுத்து அஞ்சான், குஞ்சான்களை வைத்து பேச வைப்பது சரியல்ல..

இது தமிழர் நாகரீக அரசியலுக்கு அழகல்ல என்று கூறியுள்ளார்.




தினகனி



# தமிழ் வழியில் பயின்ற மாணவர்களுக்கு அரசு வேலைவாய்ப்பில் 20 சதவீதம் இடஒதுக்கீடு: கலெக்டர் இளம்பகவத் பேச்சு



தூத்துக்குடி ஜூன் 6

தூத்துக்குடி மாவட்ட கலெக்டர் அலுவலகக் கூட்டரங்கில் மாவட்டத்தில் உள்ள அரசு, அரசு உதவிபெறும் மற்றும் தனியார் பள்ளிகளில் பயின்று 202425ம் கல்வியாண்டில் பிளஸ் 2 பொதுத்தேர்வில் ஆர்வமுடன் பயின்று தேர்ச்சி பெற்ற தாய் அல்லது தந்தை மற்றும் இருவரையும் இழந்து, உறவினர் அல்லது பாதுகாவலரின் அரவணைப்பில் இருந்து வரும் மாணவ, மாணவியர்களுடன் மாவட்ட கலெக்டர் இளம்பகவத் கலந்துரையாடி, தொழிற்கல்விப் படிப்புகள், கலை மற்றும் அறிவியல் சார்ந்த படிப்புகள், தொழில்நுட்பக்கல்வி, தொழிற்பயிற்சி கல்வி படிப்புகள், கல்லூரிகள் தேர்வு, வேலைவாய்ப்புகள் உள்ளிட்டவை குறித்த உரிய வழிகாட்டுதல்களை வழங்கினார்.

இந்த நிகழ்ச்சியில் மாவட்ட கலெக்டர் இளம்பகவத் பேசியதாவது:

கல்வி கற்பதற்கு பொருளாதாரம் ஒருபோதும் தடையாக இருந்துவிடக்கூடாது என்ற உயர்ந்த எண்ணத்தில் தமிழ்நாடு முதல் அமைச்சர் தலைமையிலான தமிழ்நாடு அரசு மாணவர்களின் நலன்காக்கும் வகையில் பல்வேறு முன்மாதிரியான திட்டங்களை செயல்படுத்தி வருகிறது. அந்தவகையில், மாணவ, மாணவியர்களிடையே உயர்கல்வியை ஊக்குவிக்கும் வகையில் நான் முதல்வன் திட்டத்தின்கீழ் கல்லூரிக்கனவு, உயர்வுக்குப்படி உள்ளிட்ட பல்வேறு நிகழ்ச்சிகள் மூலமாக மாணவர்களுக்கு உயர்கல்வி குறித்து உரிய வழிகாட்டுதல்கள் வழங்கப்பட்டு வருகிறது. மாணவர்களாகிய நீங்கள் உங்களுடைய குடும்பத்தின் பொருளாதார சூழ்நிலைகளையெல்லாம் நன்கு அறிந்து ஆர்வமுடன் பயின்று பிளஸ் 2 பொதுத்தேர்வில் தேர்ச்சி பெற்றுள்ளீர்கள். இந்த காலகட்டம்தான் உங்களுடைய வாழ்க்கையை தீர்மானிக்கக்கூடிய காலகட்டமாகும்.

மாணவர்கள் ஒவ்வொருவரும் மிகச்சரியானபாதையினை தேர்ந்தெடுத்து, படிக்க வேண்டும். மாணவர்கள் ஒவ்வொருவரும் விழிப்புடன் இருக்க வேண்டும். குறைவான கல்விக் கட்டணத்தில் தரமான கல்வி எங்கு கிடைக்கிறது என்பதை முழுமையாக ஆராய்ந்து முடிவு எடுக்க வேண்டும். நீங்களெல்லாம் ஆகச்சிறந்த மதிப்பெண்கள் எடுத்துள்ளீர்கள். ஆகையால் அரசு கல்லூரிகள், அரசு பாலிடெக்னிக் கல்லூரிகள், ஐ.டி.ஐ. போன்றவற்றில் விண்ணப்பித்து பயன்பெற வேண்டும். அதுமட்டுமல்லாமல், ஒரு சில மாணவர்கள் பொறியியல், வேளாண்மை, கால்நடை, மீன்வளம், சட்டம் போன்ற தொழிற்கல்விப் படிப்புகள் படிப்பதற்கு தகுதியாக உள்ளீர்கள். எனவே, அந்த மாணவர்கள் எல்லாம் தவறாது விருப்பமுள்ள தொழிற்கல்விப் படிப்புகளுக்கு கலந்தாய்வு மூலமாக குறைந்தது 5 பாடப்பிரிவுகளுக்கு விண்ணப்பிக்க வேண்டும்.

குறிப்பாக தொழிற்கல்விப் படிப்புகள், கலை மற்றும் அறிவியல் சார்ந்த படிப்புகளை தமிழ்வழியில் பயின்றவர்களுக்கு அரசு வேலைவாய்ப்பில் 20 சதவீதம் இடஒதுக்கீடு உள்ளது. மேலும் அரசுப் பள்ளிகளில் படித்து 7.5 சதவீத இடஒதுக்கீடு மூலம் தொழிற்கல்லூரிகளில் சேரக்கூடிய மாணவர்களுடைய அதாவது பொறியியல், வேளாண்மை, கால்நடை, மீன்வளம், சட்டம் போன்ற தொழிற்கல்விப் படிப்புகளுக்கு ஆகக்கூடிய செலவு, கல்விக் கட்டணம், விடுதிக் கட்டணம், கலந்தாய்வுக் கட்டணம் உள்ளிட்ட அனைத்தையும் தமிழ்நாடு அரசே ஏற்றுக்கொள்கிறது.

அதுமட்டும்மல்லாமல், மாணவ, மாணவியர்களிடையே உயர்கல்வியை ஊக்குவிக்கும் வகையில் அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் பயின்று உயர்கல்வி பயிலும் மாணவர்களுக்கு புதுமைப்பெண் திட்டம் மற்றும் தமிழ்ப்புதல்வன் திட்டத்தின்கீழ் மாதந்தோறும் 1000 ரூபாய் வழங்கப்படுகிறது. இந்த ஊக்கத்தொகையை மாணவர்கள் கல்வி சார்ந்த செலவினங்களுக்கு முறையாக பயன்படுத்திக்கொள்ள வேண்டும். மாணவர்களின் உறவினர் மற்றும் பாதுகாவலர்கள் ஒவ்வொருவரும் மாணவ, மாணவிகளுக்கு இந்தநேரத்தில் உறுதுணையாக இருந்து அவர்கள் வாழ்க்கையில் வெற்றி பெற வழிவகை செய்ய வேண்டும்.

உங்களுடைய குடும்ப பொருளாதார சூழ்நிலையை கருத்திற்கொண்டும், ஒவ்வொரு மாணவர்களின் எதிர்காலத்தை கருத்திற்கொண்டும் மாணவர்கள் கல்வி கற்பதற்குத் தேவையான உதவிகளை செய்வதற்கு மாவட்ட நிர்வாகம் சார்பில் முழுமுயிற்சி எடுக்கப்படும் என்பதை தெரிவித்துக்கொள்கிறேன். எனவே ஒவ்வொரு மாணவர்களும் தங்களது மதிப்பெண்களுக்கு ஏற்றார்போல் பாடப்பிரிவுகளை தேர்வு செய்து, உயர்கல்வியில் நன்கு பயின்று வாழ்க்கையில் உயர்ந்த இடத்தை அடைய வேண்டும் என அனைவரையும் அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு அவர் பேசினார்.

மேலும் இந்த நிகழ்ச்சியில் கல்லூரிகள் தேர்வு, பாடப்பிரிவுகள் தேர்வு, உயர்கல்விக்கு விண்ணப்பிப்பது உள்ளிட்ட உயர்கல்வி தொடர்பாக ஏதேனும் சந்தேகம் ஏற்படும்பட்சத்திலும் மாவட்ட கட்டுப்பாட்டு அறையின் 93846 97546 மற்றும் 97888 59175 ஆகிய கைபேசி எண்களில் தொடர்புகொண்டு பயன்பெறலாம் என்று தெரிவிக்கப்பட்டது. இந்த நிகழ்ச்சியில் மாவட்ட கல்வி அலுவலர்கள், பல்வேறு துறை சார்ந்த அலுவலர்கள், மாணவ மாணவியர்கள் மற்றும் மாணவர்களின் உறவினர் மற்றும் பாதுகாவலர்கள் கலந்துகொண்டனர்.

# திருநெல்வேலி: நீதிமன்றத்தில் ஆஜராகாமல் தலைமறைவான வாலிபர் கைது

திருநெல்வேலி ஜூன் 6


திருநெல்வேலி தாலுகா காவல் நிலைய சரகத்திற்குட்பட்ட பகுதியில் கடந்த 2023ம் ஆண்டு ஒரு பெண்ணை அவதூறாக பேசி மிரட்டல் விடுத்த வழக்கில் தொடர்புடைய சுரேஷ் (வயது 24) கைது செய்யப்பட்டு ஜாமினில் வெளிவந்தார். அவர் நீதிமன்ற விசாரணைக்கு கடந்த 2 மாதங்களாக ஆஜராகாமல் தலைமறைவாக இருந்து வந்ததால் சுரேஷ்க்கு நீதிமன்றத்தில் பிடியாணை பிறப்பிக்கப்பட்டிருந்தது.

இதனையடுத்து சுரேஷை தாலுகா காவல்துறையினர் தேடிவந்த நிலையில் நேற்று (3.6.2025) கைது செய்து நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தினர்.

# திருநெல்வேலி: 7 சவரன் தங்க செயின், பணம் திருடிய வாலிபர் கைது

திருநெல்வேலி ஜூன் 6

திருநெல்வேலி மாவட்டம், உவரி, குட்டம், மெயின் ரோடு பகுதியை சேர்ந்த சிவராம் (வயது 51) என்பவர் திசையன்விளை உள்ள ஒரு மிட்டாய் கடையில் வேலை பார்த்து வந்துள்ளார். 31.5.2025 அன்று வழக்கம் போல் சிவராம் வேலைக்கு சென றுள்ளார். மேலும் அவரது மனைவி அன்று வீட்டை




பூட்டி விட்டு ஒரு துக்க வீட்டிற்கு சென்றுள்ளார். பின் திரும்பி வந்து பார்த்த போது வீட்டின் கதவு உடைக்கப்பட்டு பீரோவின் உள்ளே இருந்த 7 சவரன் தங்க செயின் மற்றும் ரூ.2,500 பணத்தை காணவில்லை.

இதுகுறித்து சிவராம் உவரி காவல் நிலையத்தில் புகார் அளித்தார். அதன் அடிப்படையில் உவரிகாவல்நிலையத்தில் வழக்குப்பதிவு செய்யப்பட்டு, சப்இன்ஸ்பெக்டர் சங்கர் விசாரணை மேற்கொண்டார். அதில் விருதுநகர் மாவட்டம், ஸ்ரீவில்லிபுத்தூர், மம்சாபுரத்தை சேர்ந்த குழந்தைவேல்(30) என்பவர் திருட்டில் ஈடுபட்டது தெரியவந்தது. இதனையடுத்து போலீசார் குழந்தைவேலை நேற்று முன்தினம் (2.6.2025) கைது செய்து, அவரிடமிருந்து மேற்சொன்ன திருடிய பொருட்களை பறிமுதல் செய்து உரிய சட்ட நடவடிக்கை எடுத்தனர்.

# மகளிர் நல வாரியத்தில் 12ந்தேதி உறுப்பினர் சேர்க்கை

சென்னை, ஜூன் 6

சென்னை மாவட்ட கலெக்டர் ரஷ்மி சித்தார்த் ஜகடே வெளியிட்டுள்ள அறிக்கையில்,

சென்னை மாவட்டத்தில் உள்ள கைம்பெண்கள், கணவனால் கைவிடப்பட்ட பெண்கள், நலிவுற்ற பெண்கள், ஆதரவற்ற பெண்கள், முதிர்கன்னிகள் ஆகியோர்களுக்கான நலவாரியத்தில் உறுப்பினர் சேர்க்கை முகாம் சென்னைமாவட்ட கலெக்டர் அலுவலகத்தில் 8வது தளத்தில் வருகிற 12 ந்தேதி (வியாழக்கிழமை) காலை 11 மணிக்கு நடைபெறுகிறது. இம்முகாமில் கலந்து கொள்ள பயனாளிகள் தொலைபேசி எண், குடும்ப அட்டை நகல், ஆதார் நகல், அலைபேசி ஆகியவற்றை எடுத்து வந்து www.tnwidowwelfareboard.tn.gov.in என்ற இணையதளத்தில் தங்களை உறுப்பினராக பதிவு செய்து கொண்டு பயனடையுமாறு தெரிவித்துக் கொள்ளப்படுகிறது. கைம்பெண்கள் மற்றும் ஆதரவற்ற மகளிர் நல வாரியத்தில் உறுப்பினராக பதிவு செய்வதால் அவர்கள் விரும்பும் திறன் பயிற்சிக்கு விண்ணப்பிக்க உதவ முடியும்.

இத்திறன் பயிற்சி மேற்கொள்ளுதல் வாயிலாக சுய தொழில் புரிய மாவட்ட தொழில்மையம் (DIC) மற்றும் தமிழ்நாடு ஆதிதிராவிடர்வீட்டுவசதி மற்றும் மேம்பாட்டு கழகம் (TADHCO)ன்கீழ் செயல்படுத்தப்படும் சுய தொழில் திட்டங்களில் மானியத்துடன் கூடிய வங்கிக் கடன் பெறுவதற்கு வழிவகை செய்யப்படும் என தெரிவித்துக்கொள்ளப்படுகிறது. எனவே, சென்னை மாவட்டத்தில் உள்ள கைம்பெண்கள், கணவனால் கைவிடப்பட்ட பெண்கள், நலிவுற்ற பெண்கள், ஆதரவற்ற பெண்கள், முதிர் கன்னிகள் ஆகியோர் இம்முகாமில் கலந்து கொண்டு கைம்பெண்கள் மற்றும் ஆதரவற்ற மகளிர் நல வாரியத்தில் உறுப்பினர் ஆகுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது. இவ்வாறு அவர் கூறியுள்ளார்.

# ஜூலை 7ம் தேதி சீமான் நேரில் ஆஜராக கோர்ட்டு உத்தரவு

திருச்சி, ஜூன் 6

நாம் தமிழர் கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான், சமூக வலைத்தளங்களில் தன்னையும், தனது குடும்ப த்தினரையும் தரக்குறைவாக விமர்சித்ததாக திருச்சி சரக டிஐஜி வருண்குமார் தொடர்ந்த வழக்கு விசாரணை, திருச்சி குற்றவியல் நீதிமன்றம் எண்4 ல் நடைபெற்று வருகிறது.

இந்த வழக்கு பிப்.19ம் தேதி விசாரணைக்கு வந்த போதுசீமான்ஆஜராகவில்லை. இதையடுத்து, வழக்கை விசாரித்த நீதிபதி (பொ) பாலாஜி, வழக்கை ஏப்.7ம் தேதிக்கு தள்ளிவைத்தார். 7ம் தேதி இவ்வழக்கு நீதிபதி விஜயா முன்னிலையில் விசாரணைக்கு வந்தபோதும், சீமான் ஆஜராகவில்லை. அப்போது சீமான் மே 8ம் தேதி நேரில் ஆஜராக உத்தரவிடப்பட்டிருந்தது. ஆனால் சீமான் அன்றும் ஆஜராகவில்லை. எனவே வழக்கு விசாரணை மே 15ம் தேதிக்கு ஒத்தி வைக்கப்பட்டது. கடைசி வாய்ப்பு இது எனக்கூறி விசாரணையை மே 21ம் தேதிக்கு ஒத்தி வைத்து, அன்றைய தினமும் சீமான் ஆஜராகவில்லை. தொடர்ந்து சீமான் ஆஜராகாமல் இருந்து வரும் நிலையில்,

சீமான் மீது தொடர்ந்த அவதூறு வழக்கை இன்று விசாரித்த திருச்சி மாவட்ட குற்றவியல் நீதிமன்றம், வரும் ஜூலை 7ம் தேதி விசாரணைக்கு நீதிமன்றத்தில் சீமான் ஆஜராக வேண்டும். ஆஜராகவில்லை என்றால் பிடிவாரண்ட் பிறப்பிக்கப்படும் என்று கோர்ட்டு எச்சரிக்கை விடுத்துள்ளது.

# த.வெ.க. கொடிக்கும் பகுஜன் சமாஜ் கொடிக்கும் எந்த ஒற்றுமையும் இல்லை என்.ஆனந்த் பதில் மனு




சென்னை ஜூன் 6

நடிகர் விஜய்யின் தமிழக வெற்றிக் கழகத்தின் கொடியில் யானை சின்னத்தை பயன்படுத்ததடை கோரி சென்னை உரிமையியல் நீதிமன்றத்தில் பகுஜன் சமாஜ் கட்சியின் தமிழக பொதுச்செயலாளர் வழக்கு தொடர்ந்தார்.

இந்த நிலையில் இந்த வழக்கை ரத்து செய்ய வேண்டும் என்று தமிழக வெற்றிக் கழகத்தின் பொதுச்செயலாளர் என். ஆனந்த் பதில் மனு தாக்கல் செய்துள்ளார்.

அந்த மனுவில் அவர், "தமிழக வெற்றிக் கழகத்தின் கொடிக்கும், பகுஜன் சமாஜ் கட்சியின் கொடிக்கும் எந்த ஒற்றுமையும் இல்லை. பகுஜன் சமாஜ் கொடியில் இருப்பது ஒற்றை யானை, த.வெ.க. கொடியில் இருப்பது இரட்டை யானை. இரண்டுக்கும் வேறுபாடு இருக்கிறது. இதனால், வாக்காளர்களுக்கு எந்த வகையிலும் குழப்பம் ஏற்படாது.

த.வெ.க.வின் கொள்கை, கோட்பாடு தமிழகத்தின் வளர்ச்சிக்கான எதிர்கால திட்டம் ஆகியவற்றை அடிப்படையாக கொண்டு கட்சியின் கொடி உருவாக்கப்பட்டுள்ளது. த.வெ.க. கொடி ஒரு கட்சி கொடி மட்டுமல்ல; தமிழகத்தின் கலாசார பெருமை, வரலாற்று பெருமை மற்றும் சமூகத்தை பிரதிபலிக்கும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது. எனவே பகுஜன் சமாஜ் கட்சியின் மனுவை தள்ளுபடி செய்ய வேண்டும்" என்று தெரிவித்துள்ளார்

# ஓய்வூதியதாரர்களுக்கு பண்டிகை கால முன்பணம் உயர்வு தமிழக அரசு



சென்னை, ஜூன் 6

முதல் அமைச்சர் மு.க.ஸ்டாலின், கடந்த ஏப்ரல் மாதம் 28ஆம் தேதி சட்டசபையில் விதி எண் 110இன் கீழ் மாநில சிவில் மற்றும் ஆசிரியர் ஓய்வூதியதாரர்களுக்கான முக்கிய அறிவிப்பு ஒன்றை வெளியிட்டார்.

அன்று சட்டசபையில் முதல் அமைச்சர் மு.க.ஸ்டாலின், "ஓய்வூதியதாரர்கள் அவர்தம் குடும்பத்தினருடன் பண்டிகையைச் சிறப்பாகக் கொண்டாட தற்போது வழங்கப்படும் பண்டிகை கால முன்பணம், ரூ.4000ல் இருந்து ரூ.6000 ஆக உயர்த்தி வழங்கப்படும். இந்த உயர்வால், சுமார் 52 ஆயிரம் ஓய்வூதியதாரர்கள் பயன்பெறுவர். இதனால் 10 கோடி ரூபாய் கூடுதல் செலவினம் ஏற்படும்" எனத் தெரிவித்திருந்தார்.

அன்றைய தினமே, தமிழர் திருநாளாம் பொங்கல் பண்டிகைக்கு முன்னாள் கிராம பணியமைப்பு உட்பட "சி" மற்றும் "டி" பிரிவு ஓய்வூதியதாரர்கள், அனைத்து வகை தனி ஓய்வூதியதாரர்கள் மற்றும் அனைத்துக் குடும்ப ஓய்வூதியதாரர்களுக்கு தமிழ்நாடு அரசால் ஆண்டுதோறும் வழங்கப்படும் பரிசுத் தொகை ரூ.500ல் இருந்து ரூ.1000 ஆக இனி உயர்த்தி வழங்கப்படும். இந்த உயர்வால் சுமார் 4 இலட்சத்து 71 ஓய்வூதியதாரர்கள் மற்றும் குடும்ப ஓய்வூதியதாரர்கள் பயன்பெறுவார்கள். இதனால் அரசிற்கு ஏற்படும் கூடுதல் செலவினம் சுமார் 24 கோடி ரூபாயாக இருக்கும். எனத் தெரிவித்திருந்தார். அதன்படி, தமிழ்நாடு அரசு மாநில சிவில் மற்றும் ஆசிரியர் ஓய்வூதியதாரர்களுக்கு வழங்கப்பட்டு வந்த பண்டிகை முன்பணத்தை 4,000 ரூபாயிலிருந்து 6,000 ரூபாயாக உயர்த்தி வழங்க அரசாணை வெளியிடப்பட்டுள்ளது.

அதேபோல், சி மற்றும் டி பிரிவு ஓய்வூதியதாரர்கள், அனைத்து வகை தனி ஓய்வூதியதாரர்கள் மற்றும் அனைத்துக் குடும்ப ஓய்வூதியதாரர்களுக்கு தமிழக அரசால் ஆண்டுதோறும் வழங்கப்படும் பொங்கல் பரிசுத் தொகை ஐந்நூறு ரூபாயிலிருந்து ஆயிரம் ரூபாயாக உயர்த்தியும் அரசாணை வெளியிடப்பட்டுள்ளது. இதில், பண்டிகை முன்பணம் உயர்வு இவ்வாணை வெளியிடப்படும் நாள் முதல் நடைமுறைக்கு வரும். இந்த உத்தரவு வெளியிடப்பட்ட நாளுக்கு பிறகு கொண்டாடப்படும் பண்டிகைகளுக்கு பொருந்தும். இப்பண்டிகை முன்பணமானது பத்து மாதங்களுக்கு சமமான தவணைகளில் பிடித்தம் செய்யப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# திருநெல்வேலியில் பெண்ணுக்கு மிரட்டல் விடுத்த வாலிபர் கைது




திருநெல்வேலி ஜூன் 6

திருநெல்வேலி தாலுகா காவல் நிலைய சரகத்திற்குட்பட்ட கொம்மந்தானூர், பெருமாள் கோவில் தெருவை சேர்ந்த ராஜன் (வயது 43) என்பவர் 1.6.2025 அன்று இரவு வீட்டின் வெளியே நின்று கொண்டிருந்த போது,

அவ்வழியாகவந்தஅதே ஊரைச் சேர்ந்த சந்தனகுமார்(28) மற்றும் ஒருவர் சேர்ந்து ராஜனிடம் தகராறில் ஈடுபட்டு கையால் தாக்கியதை பார்த்த, அவரது மனைவி பிச்சம்மாள் தடுக்கவந்தபோதுஅவரை பெண் என்றும் பாராமல் அவதூறாக பேசி கையால் தாக்கி மிரட்டல் விடுத்து சென்றுள்ளனர்.

இதுகுறித்து ராஜன் தாலுகா காவல் நிலையத்தில் புகார் அளித்தார். அதன் அடிப்படையில் சப்இன்ஸ்பெக்டர் தங்கப்பராஜா வழக்குப்பதிவு செய்து விசாரணை மேற்கொண்டு சந்தனகுமாரை நேற்று (3.6.2025) கைது செய்து நீதிமன்ற காவலுக்கு உட்படுத்த உரிய சட்ட நடவடிக்கை எடுத்தார்.

# ஆழ்வார்திருநகரி ஆதிநாதர் ஆழ்வார் கோவிலில் நம்மாழ்வார் மங்களாசாசனம்



தூத்துக்குடி ஜூன் 6

தூத்துக்குடி மாவட்டம் ஆழ்வார்திருநகரி ஆதிநாதர் ஆழ்வார் கோவில், நம்மாழ்வாரின் அவதார தலமாகும். இக்கோவிலில் நம்மாழ்வாரின் அவதார தினமான வைகாசி விசாக நட்சத்திரத்தைமுன்னிட்டு ஆண்டுதோறும் திருவிழா நடைபெறும். அவ்வகையில் இந்த ஆண்டு திருவிழா கடந்த மாதம் 31ம் தேதி கொடியேற்றத்துடன் தொடங்கியது.

விழாவின் ஐந்தாம் நாளான இன்று காலை சுவாமி நம்மாழ்வார், நவ திருப்பதி பெருமாள்களுக்கு ஆழ்வார்திருநகரி ஆதிநாதர் ஆழ்வார் கோவில் முன்பு மங்களாசாசனம் செய்யும் நிகழ்வு நடைபெற்றது.

முன்னதாக அதிகாலையில் கோவில் நடை திறக்கப்பட்டு விஸ்வரூபம், நித்தியல், கோஷ்டி நடைபெற்றது. தொடர்ந்து காலை 11 மணியளவில் நவ திருப்பதி கோயில்களில்உள்ளஸ்ரீவைகுண்டம் கள்ளபிரான், நத்தம் எம்இடர்கடிவான், திருப்புளியங்குடி காய்சினிவேந்தன், பெருங்குளம் மாயக்கூத்தன், தொலைவில்லிமங்கலம் செந்தாமரைக்கண்ணன், இரட்டை திருப்பதி தேவபிரான், தென்திருப்பேரை நிகரில் முகில்வண்ணன், திருக்கோளூர் வைத்தமாநிதி பெருமாள் ஆகிய பெருமாள்களுக்கு சுவாமி நம்மாழ்வார் மங்களாசாசனம் செய்தார்.

பின்னர் சுவாமி நம்மாழ்வாருக்கு மதுரகவி ஆழ்வார்மங்களாசாசனம் செய்யும் நிகழ்ச்சி நடந்தது. இந்த நிகழ்ச்சியில் ஆயிரக்கணக்கான பக்தர்கள் கலந்துகொண்டு சுவாமி தரிசனம் செய்தனர்.

திருவிழா காலங்களில் காலையிலும் மாலையிலும் சுவாமி நம்மாழ்வார் பல்வேறு வாகனங்களில் எழுந்தருளி வீதி உலா வரும் நிகழ்வு நடைபெறும். 8ம் தேதி சிகர நிகழ்ச்சியான தேர்த் திருவிழா நடைபெறுகிறது. 9ம் தேதி தீர்த்தவாரி நடைபெறுகிறது. விழா ஏற்பாடுகளை கோயில் நிர்வாகத்தினர் மற்றும் பக்தர்கள் செய்து வருகின்றனர்.

# சட்டசபை தேர்தலில் தமிழகத்தில் வலுவாக காலூன்ற வேண்டும் என்பது பாஜக மேலிட தலைவர்களின் குறிக்கோளாக உள்ளது.

மதுரை,. ஜூன் 6

தமிழக சட்டசபைக்கு அடுத்த ஆண்டு ஏப்ரல், மே மாதங்களில் தேர்தல் நடைபெற உள்ளது. தேர்தலுக்கான பணிகளை தலைமை தேர்தல் ஆணையம் இந்த வாரம் அதிகாரப்பூர்வமாக தொடங்கி உள்ளது. தேர்தலுக்கு இன்னும் 8 மாதங்களே இருந்தாலும் இப்போதே எல்லா கட்சிகளும் தேர்தல் பணிகளை தொடங்கிவிட்டன. ஆளும் கட்சியான திமுக ஏற்கனவே பிரசாரத்தை தொடங்கி விட்டதாக கட்சியின் தலைவரும், முதல்அமைச்சருமான மு.க.ஸ்டாலின் அறிவித்துள்ளார்.

2026ம் ஆண்டு தேர்தலில் 200க்கும் அதிகமான தொகுதிகளில் வெற்றி பெற வேண்டும் என்று திமுக இலக்கு நிர்ணயித்துள்ளது. இதற்கான பணிகளை தீவிரப்படுத்தும் வகையில் மதுரையில் கடந்த 1ம் தேதி திமுக பொதுக்குழு கூட்டம் நடைபெற்றது. அதில் ஒவ்வொரு தொகுதியிலும் 30சதவீத வாக்காளர்களைதிமுக உறுப்பினர்களாக்க சிறப்பு தீர்மானம் கொண்டு வரப்பட்டுள்ளது.

இதற்கிடையே அதிமுக சட்டசபை தேர்தலை கருத்தில் கொண்டு களப்பணிகளை முன்னெடுத்து வருகிறது. விரைவில் அதிமுக பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி தமிழகம் முழுவதும் சுற்றுப்பயணம் தொடங்க உள்ளதாக கூறப்படுகிறது.

அவரது இந்த சுற்றுப்பயணம் மதுரை அல்லது கன்னியாகுமரியில் இருந்து தொடங்குவதற்கு வாய்ப்பு உள்ளதாக கட்சி நிர்வாகிகள் தெரிவித்துள்ளனர். சட்டமன்ற தொகுதி வாரியாக நகர்ப்புறங்கள் கிராமப்பகுதிகள் ஆகியவற்றை உள்ளடக்கிய பிரச்சார திட்டங்களைவகுக்குமாறு அதிமுக மூத்த தலைவர்களிடம் எடப்பாடி பழனிசாமி வலியுறுத்தி உள்ளார்.

இந்தநிலையில்,அதிமுகதலைமையிலானகூட்டணியில் அங்கம் வகிக்கும் பாஜகவும் 2026ம் ஆண்டு தமிழக சட்டசபை தேர்தலை முக்கியமானதாக கருதுகிறது. இந்த தேர்தலில் தமிழகத்தில் வலுவாக காலூன்ற வேண்டும் என்பது பாஜக மேலிட தலைவர்களின் குறிக்கோளாக உள்ளது.

இந்தகுறிக்கோளை எட்டுவதற்காகவே அதிமுகபாஜக கூட்டணியை கடந்த மாதம் சென்னைக்கு வந்து மத்திய மந்திரி அமித்ஷா உருவாக்கினார். இந்த கூட்டணியை மேலும் வலுவடைய செய்வதற்கு அவர் தொடர்ந்து ஆலோசனையில் ஈடுபட்டுள்ளார். இதற்காக மத்திய மந்திரி அமித்ஷா தமிழகத்திற்கு வரவும் திட்டமிட்டுள்ளார். முதல் கட்டமாக வருகிற 8ம் தேதி மதுரைக்கு வர இருக்கிறார். அப்போது அவர் தமிழக பாஜக நிர்வாகிகளை சந்தித்து உரையாடுகிறார். அன்று மதியம் 3 மணிக்கு நடைபெறும் தென் மாவட்ட அளவிலான நிர்வாகிகள் கூட்டத்தில் பங்கேற்கும் அமித்ஷா தேர்தல் கூட்டணி, சட்டமன்ற தேர்தல் தொகுதிகள் வெற்றி விவரம், வியூகம் அமைப்பது குறித்து ஆலோசனை நடத்த உள்ளதாக தகவல் வெளியாகி உள்ளது. ஏற்கெனவே திமுக பொதுக்குழு மதுரையில் நடைபெற்ற நிலையில், அமித்ஷா வருவது மதுரை அரசியல் வட்டாரத்தில் பெரும் எதிர்பார்ப்பை ஏற்படுத்தி உள்ளது.

# தூத்துக்குடியில் 17 தாசில்தார்கள் பணியிட மாற்றம்: கலெக்டர் உத்தரவு




தூத்துக்குடி ஜூன் 6

தூத்துக்குடி மாவட்ட வருவாய் அலகில் நிர்வாக நலன் கருதி தாசில்தார் நிலையில் 17 பேரை மாறுதல்களும், நியமனங்களும் செய்து மாவட்ட கலெக்டர் இளம்பகவத் உத்தரவிட்டுள்ளார். இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள உத்தரவில் கூறியிருப்பதாவது:

தூத்துக்குடி, வாஞ்சி மணியாச்சி நாகர்கோவில் இரட்டை அகல ரயில் பாதை திட்டம் தனி தாசில்தார் (நி.எ) கலா கயத்தார் தனி தாசில்தாராகவும் (ச.பா.தி), கோவில்பட்டி முன்னாள் தாசில்தார் வசந்த மல்லிகா தூத்துக்குடி அரசு கேபிள் டிவி தனி தாசில்தாராகவும், தூத்துக்குடி அரசு கேபிள் டிவி தனி தாசில்தார் ராஜலட்சுமி சில்லாநத்தம் சிப்காட் தனி தாசில்தாராகவும் (நி.எ), தூத்துக்குடி நெடுஞ்சாலைப்பணிகள் தனி தாசில்தார் (நி.எ) பொன்னுலட்சுமி சாத்தான்குளம் தாசில்தாராகவும், கயத்தார் தனி தாசில்தார் (ச.பா.தி) அறிவழகன்(எ) சிவராஜ் ஓட்டப்பிடாரம் தாசில்தாராகவும், தூத்துக்குடி தனி தாசில்தார் (ச.பா.தி) அந்தோனி ஜெபராஜ் திருச்செந்தூர் தாசில்தாராகவும், எட்டயபுரம், வெம்பூர் சிப்காட் தனி தாசில்தார் (நி.எ) பாலசுப்பிரமணியம் கோவில்பட்டி தாசில்தாராகவும், ஏரல் தனி தாசில்தார் (ச.பா.தி) கண்ணன் விளாத்திகுளம் தாசில்தாராகவும், சாத்தான்குளம் தாசில்தார் இசக்கிமுருகேஸ்வரி தூத்துக்குடி தனி தாசில்தாராகவும் (ச.பா.தி), திருச்செந்தூர் தாசில்தார் பாலசுந்தரம் ஏரல் தனி தாசில்தாராகவும் (ச.பா.தி), கோவில்பட்டி தாசில்தார் சரவணப்பெருமாள் எட்டையபுரம் தாசில்தார் அலுவலகம் தனி தாசில்தாராகவும் (ச.பா.தி), விளாத்திகுளம் தாசில்தார் ராமகிருஷ்ணன் எட்டயபுரம், வெம்பூர் சிப்காட் தனி தாசில்தாராகவும் (நி.எ), ஓட்டப்பிடாரம் தாசில்தார் ஆனந்த் தூத்துக்குடி நெடுஞ்சாலைப்பணிகள் தனி தாசில்தாராகவும் (நி.எ), சில்லாநத்தம் சிப்காட் தனி தாசில்தார் (நி.எ) சுப்புலட்சுமி ஓட்டப்பிடாரம், தெற்கு வீரபாண்டியபுரம் சிப்காட் தனி தாசில்தாராகவும் (நி.எ), தூத்துக்குடி, அல்லிகுளம் சிப்காட் தனி தாசில்தார் (நி.எ) வாமணன் ஓட்டப்பிடாரம், தெற்கு வீரபாண்டியபுரம் சிப்காட் தனி தாசில்தாராகவும் (நி.எ), ஓட்டப்பிடாரம், தெற்கு வீரபாண்டியபுரம் சிப்காட் தனி தாசில்தார் (நி.எ) ராணி தூத்துக்குடி, தேசிய நெடுஞ்சாலைகள் தனி தாசில்தாராகவும் (நி.எ), தூத்துக்குடி, தேசிய நெடுஞ்சாலைகள் தனி தாசில்தார் (நி.எ) செல்வலட்சுமி ஓட்டப்பிடாரம், தெற்கு வீரபாண்டியபுரம் சிப்காட் தனி தாசில்தாராகவும் (நி.எ) பணியிட மாறுதல் செய்யப்படுகின்றனர்.

இம்மாறுதல்கள் குறித்து எவ்வித மேல்முறையீடும் ஏற்றுக்கொள்ளப்படாது. தனியர்கள் உடனடியாக புதிய பணியிடத்தில் பணியேற்க வேண்டும். பணி மாறுதல் குறித்து எவ்வித கோரிக்கையும் ஏற்றுக் கொள்ளப்படாது. பணியேற்பிடைக்காலத்திற்குள் பணியேற்காது மேற்படி நாட்கள் அ.வி.108 r/w Govt. Lr.No.53280/Revenue (Ser.1) Dept./20041 dated 5.5.2006ன்படி ஊதியமில்லா விடுப்பாக வரன்முறைபடுத்தப்படும் என்ற விபரம் தெரிவிக்கப்படுகிறது. தனியர்கள் மேற்படி பணியிடத்தில் பணியில் சேர்ந்த விவரத்திற்கு அறிக்கை சமர்பிக்க சம்பந்தப்பட்ட அலுவலர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

# பொறியியல் சேர்க்கைக்கு 2.90 லட்சம் மாணவர்கள் பதிவு அமைச்சர் கோவி. செழியன்



சென்னை ஜூன் 6

தமிழ்நாடு பொறியியல் சேர்க்கைக்கான விண்ணப்பப் பதிவு கடந்த மாதம் 7ந்தேதி தொடங்கி வைக்கப்பட்டது. இன்று வரை 2,90,678 மாணவர்கள் விண்ணப்பப் பதிவு செய்துள்ளதாக உயர்கல்வித்துறை அமைச்சர் கோவி. செழியன் தெரிவித்துள்ளார். இது குறித்து உயர்கல்வித்துறை அமைச்சர் தெரிவித்துள்ளதாவது:

கடந்த மாதம் 7ந்தேதி அன்று தமிழ்நாடு பொறியியல் சேர்க்கைக்கான இணையதள விண்ணப்பப் பதிவு தொடங்கப்பப்பட்டது. இன்று மாலை 6 மணி நிலவரப்படி 2,90,678 மாணவர்கள் விண்ணப்பப் பதிவு செய்துள்ளனர். இதில் 1,27,337 மாணவர்களும், 1,05,395 மாணவிகளும் ஆக மொத்தம் 2,32,732 மாணாக்கர்கள் விண்ணப்பக் கட்டணம் செலுத்தி உள்ளனர்.

இதுவரை விண்ணப்பிக்காத மாணவர்கள் இந்த வாய்ப்பினை பயன்படுத்தி, வரும் 6ந்தேதிக்குள் www.tneaonline.org என்ற இணையதள முகவரியில் பொறியியல் சேர்க்கைக்கான தங்களது விண்ணப்பங்களை பதிவு செய்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது. மேலும், விண்ணப்ப பதிவு செய்த மாணவர்கள் தங்களது சான்றிதழ்களை 9ந்தேதிக்குள் பதிவேற்றம் செய்யுமாறும் கேட்டுக்கொள்ளப்படுகிறது.

மாணவர்களுக்கு ஏதேனும் விளக்கங்கள் தேவைப்படின் தமிழ்நாடு முழுவதும் 110 தமிழ்நாடு பொறியியல் மாணாக்கர் சேரக்கை சேவை மையங்கள் (TFC Centres) நிறுவப்பட்டுள்ளன. அந்த சேவை மையங்களை தொடர்பு கொள்ளலாம் மற்றும் 1800 425 0110 என்ற கட்டணமில்லா தொலைபேசி எண் வாயிலாகவோ தொடர்பு கொண்டு தங்களது சந்தேகங்களை தெளிவுப்படுத்தி கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன். இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

# மகளிர் விடியல் பயண திட்டத்தில் 139 கோடி முறை பெண்கள் பயணம்



சென்னை ஜூன் 6

தமிழக அரசு, பெண்களின் நலனுக்காக பல்வேறு நலத்திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறது. அதில் மிக முக்கிய திட்டமாக, மகளிர் விடியல் பயணத்திட்டத்தின் கீழ் அரசு மாநகர பேருந்துகளில் மகளிர் கட்டணமின்றி பயணித்து வருகின்றனர்.

சமூக, பொருளாதார வளர்ச்சியில் பெண்களின் பங்களிப்பை அதிகரிக்கும் மற்றும் உயர்த்தும் நோக்கில் 2021ம் ஆண்டு கொண்டு வரப்பட்ட இந்தத் திட்டத்துக்கு தமிழக பெண்களிடம் பெரும் வரவேற்பு கிடைத்துள்ள நிலையில், இந்தப் பேருந்துகளில் பயணிக்கும் பெண் பயணிகளின் எண்ணிக்கை உயர்ந்துள்ளது.

இந்த நிலையில், மகளிர் விடியல் பயணத் திட்டத்தின் கீழ், திட்டம் அறிமுகப்படுத்தப்பட்ட நாள் முதல் தற்போது வரை சென்னை மாநகர விடியல் பயண பேருந்துகளில் 139 கோடி முறை பெண்கள் பயணம் மேற்கொண்டுள்ளனர் என சென்னை மாநகரப் போக்குவரத்துக் கழகம் தெரிவித்துள்ளது. இது தொடர்பாக வெளியிடப்பட்டுள்ள பதிவில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:

சென்னை, மாநகர போக்குவரத்துக் கழக பேருந்துகளில் மகளிர் விடியல் பயண திட்டம் அறிமுகப் படுத்தப்பட்ட நாள் முதல் தற்போது வரை 139 கோடி பெண்கள் பயணித்துள்ளனர். கடந்த மே மாதத்தில் 3.74 கோடி பெண்கள் பயணம் மேற்கொண்டுள்ளனர். இது 2024ம் ஆண்டு மே மாதம் பயணம் மேற்கொண்ட பயணிகளை விட 21 சதவீதம் அதிகம் ஆகும். கடந்த மே மாதத்தில் நாள் ஒன்றிற்கு சராசரியாக 12.06 லட்சம் பெண்கள் பயணம் செய்து பயனடைந்துள்ளனர்.

இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# குடும்ப அட்டைதாரர்கள் அருகிலுள்ள ரேசன் கடைகளில் கைவிரல் ரேகைகளை பதிவு செய்யுங்கள் தூத்துக்குடி கலெக்டர் அறிவுறுத்தல்



தூத்துக்குடி ஜூன் 6

தூத்துக்குடி மாவட்ட கலெக்டர் இளம்பகவத் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் கூறியிருப்பதாவது:

தூத்துக்குடி மாவட்டத்தில் ரேசன் கடைகளில் அத்தியாவசியப் பொருட்கள் பெற்றுவரும் AAY/PHH குடும்ப அட்டைதாரர்கள் மொத்தம் 9 லட்சத்து 27 ஆயிரத்து 955 பேர் உள்ள நிலையில் இதுவரை 7 லட்சத்து 94 ஆயிரத்து 44 குடும்ப அட்டைதாரர்கள் மட்டுமே கை ரேகை பதிவு (eKYC) செய்துள்ளார்கள். இன்னும் 1 லட்சத்து 33 ஆயிரத்து 547 குடும்ப அட்டைதாரர்கள் கை ரேகை பதிவு செய்யாமல் உள்ளனர். அரசின் சலுகைகளை தொடர்ந்து பெற தங்கள் குடும்ப அட்டையில் இடம்பெற்றுள்ள உறுப்பினர்கள் அனைவரும் தங்களது கைரேகைகளை பதிவு செய்திட கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

வெளியூரில் / வெளி மாவட்டத்தில் தங்கி பணிபுரிந்துவரும் நபர்கள் மற்றும் பள்ளிக் கல்லூரிகளில் படித்துவரும் மாணவ, மாணவிகள் தாங்கள் இருக்கும் ஊரில்/மாவட்டத்திலுள்ள ரேசன் கடைகளுக்கு நேரில் சென்று தங்கள் ரேகையை பதிவு செய்ய (eKYC) கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். மேற்சொன்ன பணி விரைவில் முடிவுற இருப்பதால் AAY/PHH குடும்ப அட்டைதாரர்கள் தங்கள் குடும்ப உறுப்பினர் அனைவருடன் அருகில் உள்ள ரேசன் கடைகளுக்குச் சென்று விரல் ரேகை/கண் விழி பதிவு (ஐரிஸ்) செய்ய கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

# டாஸ்மாக் வருமானத்தை பெருக்குவது குறித்து மட்டுமே முதல்வர் சிந்தித்துக் கொண்டிருக்கிறார்: நயினார் நாகேந்திரன்



சென்னை ஜூண்6

தமிழக பா.ஜ.க. தலைவர் நயினார் நாகேந்திரன் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்திருப்பதாவது:

பலர் குடியைக் கெடுக்கும் டாஸ்மாக்கில் எப்படி வருமானம் ஈட்டலாம் என்பதை மட்டுமே சிந்தித்துக் கொண்டிருக்கும் தி.மு.க. அரசு, தமிழகத்தில் முதலீடு செய்ய விரும்பும் பன்னாட்டு நிறுவனங்களுக்குத் தேவையான உட்கட்டமைப்பு வசதிகளை செய்து தராமல் பல கோடிக்கணக்கான முதலீடுகளையும், பல்லாயிரக்கணக்கான வேலை வாய்ப்புகளையும் பிற மாநிலங்களுக்கு தாரை வார்த்துக் கொடுப்பதையே வாடிக்கையாக வைத்துள்ளது.

சமீபத்தில் கூட தமிழகத்திற்கு வர வேண்டிய பாக்ஸ்கான், HCL நிறுவனங்களின் சுமார் ரூ.3,700 கோடி மதிப்பிலான முதலீடுகளும் உத்தரப்பிரதேச மாநிலத்திற்குகைமாறி விட்டதாக வெளியாகியுள்ள செய்திகள் மிகுந்த ஏமாற்றமளிப்பதோடு, ஆளும் அறிவாலய அரசின் நிர்வாக லட்சணம் என்ன என்பதையும் நமக்கு வெளிச்சம் போட்டுக் காட்டுகிறது.

ஆனால் கையில் வெண்ணெயை வைத்துக் கொண்டு ஊரெல்லாம் நெய்க்கு அலையும் கதையாக, தமிழகத்திற்கு தானாகக் கிடைக்கும் முதலீடுகளைத் தக்க வைப்பதில் கவனம் செலுத்த வேண்டிய தமிழக முதல்வர் ஸ்டாலினோ, "முதலீடுகளை ஈர்க்கிறேன் என்ற பெயரில் வருடா வருடம் வெளிநாடுகளுக்கு சுற்றுலா சென்று மக்கள் பணத்தை விரயமாக்கிக் கொண்டிருக்கிறார்.

"புலி வருது, புலி வருது" என்ற கதையாக தி.மு.க. ஆட்சிப்பொறுப்பேற்ற நான்காண்டுகளில் தமிழகத்திற்கு கிடைத்த முதலீடுகள் எல்லாம் வெறும் வாய் வார்த்தைகளில் மட்டுமே. அது குறித்த வெள்ளையறிக்கையை வெளியிடச்சொன்னாலோ அல்லது ஆண்டுக்கு 10 லட்சம் வீதம் ஐந்தாண்டுகளில் 50 லட்சம் வேலைவாய்ப்புகள் வழங்கப்படும் என்ற தி.மு.க.வின் தேர்தல் வாக்குறுதி (எண் 185) என்ன வாயிற்று எனக் கேள்வி கேட்டாலோ முதல்வரிடம் பதிலில்லை.

இவ்வாறு அபார ஆற்றலும், அசாத்திய திறமைகளையும் கொண்ட நமது தமிழக இளைஞர்களுக்குத் தகுதியான வேலை வாய்ப்புகளையும், வளமான எதிர்காலத்தையும் அமைத்துத் தராமல் தங்கள் மோசடிகளை மூடி மறைப்பதிலேயே முழுக் கவனம் செலுத்திவரும் தமிழக முதல்வரும் அவரது அமைச்சர்களும் அரசுப் பதவி வகிக்க துளியும் தகுதியற்றவர்கள். நமது இளைஞர்களின் வேலை வாய்ப்புக் கனவுகளைத் தொடர்ந்து தகர்த்து வரும் இந்த ஊழல் ஆட்சிக்கு வரும் 2026ல் முடிவு கட்டப்படும்! இவ்வாறு அதில் தெரிவித்துள்ளார்.

# பள்ளி மாணவர்கள் கைகளில் வண்ணக் கயிறுகள் கட்டக் கூடாது நெல்லை மாவட்ட கல்வித்துறை சுற்றறிக்கை



நெல்லை, ஜூன் 6

நெல்லை மாவட்டத்தில் பள்ளி மாணவர்களுக்கிடையே மோதல், பள்ளி வளாகத்திற்குள் தாக்குதல் உள்ளிட்ட சம்பவங்கள் கடந்த காலங்களில் நிகழ்ந்த நிலையில், எதிர் வரும் கல்வியாண்டில் இதுபோன்ற சம்பவங்கள் நடைபெறாமல் தடுக்கும் வகையில், கல்வித்துறை சார்பில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

அதன் ஒரு பகுதியாக நெல்லை மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் சிவக்குமார், தனது நிர்வாக கட்டுப்பாட்டின் கீழ் உள்ள அனைத்து பள்ளிகளுக்கும் சுற்றறிக்கை ஒன்றை அனுப்பியுள்ளார். அந்த சுற்றறிக்கையில் 14 கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ளன. மாணவர்களின் நல்லொழுக்கத்தை பேணும் வகையில் இந்த 14 கட்டுப்பாடுகளும் ஆசிரியர்களால் கண்காணிக்கப்பட வேண்டும் என அறிவுறுத்தப்பட்டுள்ளது.

பள்ளிகளுக்கு வரும் மாணவர்கள் முறையாக தலைமுடியை வெட்டியிருக்க வேண்டும், பள்ளிக்கு விடுமுறை எடுக்கும் மாணவர்கள் பெற்றோரிடம் முறையான அனுமதி பெற்று அதற்கான ஒப்புதலை வகுப்பு ஆசிரியரிடம் தெரிவிக்க வேண்டும், முறையில்லாமல் விடுப்பு எடுத்திருந்தால் அடுத்த நாள் பள்ளிக்கு வரும் போது பெற்றோரை அழைத்து வர வேண்டும் என்று கூறப்பட்டுள்ளது.

அதே போல் பள்ளிக்கு வரும் மாணவர்கள் தங்கள் கைகளில் வண்ணக் கயிறுகளை கட்டியிருக்க கூடாது, நெற்றியில் கலர் கலரான பொட்டுகள் வைத்திருக்க கூடாது, மாணவிகள் கலர் ரிப்பன் கட்டி வருவதை தவிர்க்க வேண்டும், பள்ளி சீருடையோடு கொடுக்கப்படும் வண்ண ரிப்பன்களை மட்டுமே அணிந்திருக்க வேண்டும் என அறிவுறுத்தப்பட்டுள்ளது.

மாணவ, மாணவிகளிடையே மோதல் ஏற்படாமல் இருப்பதை கண்காணிக்கும் பணியில் பள்ளி தலைமை ஆசிரியர்கள் ஈடுபட வேண்டும், தினந்தோறும் பள்ளி நுழைவாயிலில் அனைத்து மாணவர்களின் புத்தக பைகளையும் சோதனை செய்ய வேண்டும் என்று சுற்றறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# பூந்தமல்லியில் 7 கிலோ கஞ்சா கடத்திய வாலிபர் கைது



சென்னை ஜூன் 6

சென்னை, பூந்தமல்லியில் விற்பனை செய்வதற்காக 7 கிலோ கஞ்சாவை கடத்தி வந்த பட்டாபிராம், தண்டரை, வெள்ளாளர்நகர் பகுதியைச் சேர்ந்த அப்துல்லத்தீப் என்ற வாலிபரை பூந்தமல்லி மதுவிலக்கு போலீசார் கைது செய்து, கஞ்சாவை பறிமுதல் செய்து, சிறையில் அடைத்தனர். மேலும் போலீசார் மேற்கொண்ட தீவிர விசாரணையில் அப்துல்லத்தீப் ஆந்திர மாநிலம் ராஜமுந்திரியில் மொத்தமாக கஞ்சா வாங்கி வந்து, பூந்தமல்லி சுற்று பகுதியில் விற்பனை செய்தது தெரியவந்தது.

# தமிழ்நாட்டின் மிகப் பெரிய பல்லுயிர்ப் பூங்கா கடம்பூரில் உருவாகிறது: முதல்அமைச்சர் மு.க. ஸ்டாலின் பதிவு

சென்னை ஜூன் 6

தமிழ்நாட்டின் மிகப் பெரிய பல்லுயிர்ப் பூங்கா செங்கல்பட்டு மாவட்டம் கடம்பூரில் உருவாகிறது என்று முதல்அமைச்சர் மு.க. ஸ்டாலின் கூறியுள்ளார். இதுதொடர்பாக எக்ஸ் தளத்தில் அவர் வெளியிட்டுள்ள பதிவில்,

"தமிழ்நாட்டின் மிகப் பெரிய பூங்காவாக, செங்கல்பட்டு மாவட்டம் கடம்பூரில் உருவாகிறது எழில்கொஞ்சும் பல்லுயிர்ப் பூங்கா!

இன்றைய பார்வையில், சங்க இலக்கியங்கள் சொல்லும் ஐந்திணைப் பூங்கா! இன்று நான் VRல் கண்டவற்றை, தமிழ்நாட்டு மக்கள் நேரில் காண விரைந்து உருவாக்கிடுங்கள்" என்று அமைச்சர்கள் ராஜகண்ணப்பன், தங்கம் தென்னரசு மற்றும் சுற்றுச்சூழல் பருவநிலை மாற்றம் மற்றும் வனத்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் சுப்ரியா சாஹூவை குறிப்பிட்டு பதிவிட்டுள்ளார்.

மேலும் இது தொடர்பான வீடியோ ஒன்றையும் அவர் பகிர்ந்துள்ளார்.

# கர்நாடக அரசும், ஆர்.சி.பி. நிர்வாகமும்தான் உயிரிழப்புகளுக்கு பொறுப்பேற்க வேண்டும்: அன்புமணி ராமதாஸ் கண்டனம்




சென்னை ஜூன் 6

18வது ஐ.பி.எல். கிரிக்கெட் தொடரில் ராயல் சேலஞ்சர்ஸ் பெங்களூரு அணி வெற்றி பெற்று முதல் முறையாக கோப்பையை கைப்பற்றியது. இந்த வெற்றியை கொண்டாட கர்நாடக முதல்மந்திரி, துணை முதல்மந்திரி, ஆகியோர் தலைமையில் பெங்களூருவில் பாராட்டு நிகழ்வுக்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

சின்னசாமி மைதானத்தில் அவர்களுக்கு பாராட்டு விழா நடைபெற இருந்த நிலையில், பெங்களூரு அணியை வரவேற்க ஆயிரக்கணக்கான ரசிகர்கள் திரண்டனர். இதில் ஏற்பட்ட கூட்டநெரிசலில் சிக்கி 11 பேர் உயிரிழந்துள்ளனர். மேலும் 50க்கும் மேற்பட்டோர் படுகாயமடைந்துள்ளனர். இந்த நிலையில் இந்த உயிரிழப்புகளுக்கு கர்நாடக அரசும், ஆர்.சி.பி. நிர்வாகமும்தான் பொறுப்பேற்க வேண்டும் என்று பா.ம.க. தலைவர் அன்புமணி ராமதாஸ் கூறியுள்ளார்.

இது தொடர்பாக எக்ஸ் தளத்தில் அவர் வெளியிட்டுள்ள பதிவில், "ஐ.பி.எல் கோப்பையை ராயல் சேலஞ்சர்ஸ் பெங்களூரு அணி வென்றதைக் கொண்டாடும் வகையில், கர்நாடகத் தலைநகர் பெங்களூருவில் இன்று நடைபெற்ற வெற்றிப் பேரணியில் 11 பேர் உயிரிழந்தனர்; 50க்கும் மேற்பட்டோர் படுகாயமடைந்து மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர் என்ற செய்தியறிந்து பெரும் அதிர்ச்சியும், வேதனையும் அடைந்தேன். பெங்களூரு அணி 18 ஆண்டுகளில் முதன் முறையாக ஐ.பி.எல் கோப்பையை வென்ற நிலையில் ரசிகர்களிடம் ஏற்பட்ட அளவு கடந்த உற்சாகத்தை நேற்று இரவே அறிய முடிந்தது. அதன் பின் 12 மணி நேர அவகாசத்தில் வெற்றிக் கொண்டாட்டம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த நிலையில், அளவு கடந்த கூட்டம் வரும் என்பதை கணித்து அதற்கேற்ப பாதுகாப்பு ஏற்பாடுகளை செய்திருக்க வேண்டும்; இல்லாவிட்டால் கொண்டாட்டத்தை இன்னும் சில நாட்களுக்கு தள்ளி வைத்திருக்க வேண்டும். இவற்றைச் செய்யத் தவறிய கர்நாடக அரசும், ஆர்.சி.பி. அணி நிர்வாகமும்தான் உயிரிழப்புகளுக்கு பொறுப்பேற்க வேண்டும்.

கூட்ட நெரிசலில் உயிரிழந்த அனைவருக்கும் ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபங்களையும் தெரிவித்துக் கொள்கிறேன். மேலும் பலர் உயிருக்கு ஆபத்தான நிலையில் மருத்துவம் பெற்று வரும் நிலையில் அவர்களின் உயிர்களைக் காக்க நடவடிக்கை எடுக்கும்படி கேட்டுக் கொள்கிறேன்" என்று தெரிவித்துள்ளார்.

# கோவில் திருவிழாக்களில் ஆடல், பாடல் நிகழ்ச்சி நிபந்தனையுடன் அனுமதி



மதுரை, ஜூன் 6

மதுரை ஐகோர்ட்டு கிளை அமர்வுக்கு உட்பட்ட 14 மாவட்டங்களில் கோவில் திருவிழாக்களின்போது ஆடல், பாடல் நிகழ்ச்சிகளை நடத்துவதற்கு அனுமதி வழங்கக் கோரி தாக்கல் செய்யப்பட்ட 7க்கும் மேற்பட்ட மனுக்கள் இன்று விசாரணைக்கு வந்தன.

இந்த மனுக்களை விசாரித்த மதுரை ஐகோர்ட்டு கிளை நீதிபதி புகழேந்தி, கோவில் திருவிழாக்களில் ஆடல், பாடல் நிகழ்ச்சிகளை நடத்துவதற்கு நிபந்தனைகளுடன் அனுமதி அளித்து உத்தரவிட்டார். இதன்படி, கோவில் திருவிழாக்களில் ஆடல், பாடல் நிகழ்ச்சிகளை நடத்துவபர்கள் ரூ.25 ஆயிரம் முன்பணத்தை சம்பந்தப்பட்ட உள்ளாட்சி அமைப்புகளின் செயலாளரிடம் செலுத்த வேண்டும் என்றும், அந்த பணத்தை வைத்து கிராமப்புறங்களில் உள்ள நீர்நிலைகளை சுத்தப்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று நீதிபதி தனது உத்தரவில் தெரிவித்துள்ளார்.

தினகனி
Namadhu dhina kani daily morning newspaper
Press register general of India
PRGI NO TNTAM/2023/88253
6.6.2025

# மதுவிலக்கை அமல்படுத்த அரசு முழுமனதுடன் பாடுபட வேண்டும்: மதுரை ஐகோர்ட்டு



மதுரை, ஜூன் 6

திண்டுக்கல்லை சேர்ந்த கண்ணன்என்பவர்மதுரை ஐகோர்ட்டில் தாக்கல் செய்த மனுவில், "திண்டுக்கல் மாநகராட்சியில் திருச்சி சாலையில் டாஸ்மாக் கடை செயல்படுகிறது. இந்த கடை உள்ள பகுதி பொதுமக்கள், மாணவ, மாணவிகள், பெண்கள் அதிகம் நடமாடும் பகுதியாகும். இந்த கடையில் மதுபானங்கள் வாங்கி குடித்துவிட்டு போதையில் உலவும் பலர், சமூகவிரோத செயல்களில் ஈடுபடுகின்றனர். இதனால் பொதுமக்கள் கடும் பாதிப்புக்கு ஆளாகி வருகின்றனர். எனவே திருச்சி சாலையில் உள்ளடாஸ்மாக்கடையை மூட அதிகாரிகளுக்கு உத்தரவிட வேண்டும்" என கூறியிருந்தார்.

இந்த வழக்கு நீதிபதிகள் எஸ்.எம்.சுப்பிரமணியம், மரிய கிளாட் ஆகியோர் முன்பு விசாரணைக்கு வந்தது. அப்போது மனுதாரர் தரப்பில் ஆஜரான வக்கீல், இந்த டாஸ்மாக் கடையில் இருந்து 30 மீட்டர் மற்றும் 50 மீட்டர் தூரத்தில் 2 பள்ளிகள், கிறிஸ்தவ ஆலயம் ஆகியவையும், 100 மீட்டர் தூரத்தில் அரசு மருத்துவமனை உள்ளிட்டவையும் செயல்படுகின்றன. எனவே டாஸ்மாக் கடையால் நோயாளிகள், சாலையில் நடந்து செல்பவர்கள், மாணவர்கள் பாதிக்கப்படுகின்றனர், என வாதாடினார்.

டாஸ்மாக் நிர்வாகம் சார்பில் ஆஜரான வக்கீல், இந்த டாஸ்மாக் கடை மாநகராட்சி எல்லைக்குள் இருப்பதாலும், வணிகப் பகுதியில் செயல்படுவதாலும் அந்த கடைக்கு மனுதாரர் தெரிவிக்கும் தூரக்கட்டுப்பாட்டு விதிகள் பொருந்தாது என்றார். விசாரணை முடிவில், நீதிபதிகள் பிறப்பித்த உத்தரவு வருமாறு:

மக்களின் வாழ்க்கை தரத்தை உயர்த்துவதும், பொது சுகாதாரத்தை மேம்படுத்துவதும்தான் அரசின் முதன்மையான கடமை. குறிப்பாக மருத்துவ நோக்கங்களை தவிர, போதைப்பொருள் மற்றும் ஆரோக்கியத்திற்கு தீங்கு விளைவிக்கும் மருந்துகளை உட்கொள்வதை தடை செய்ய அரசு முயற்சிக்க வேண்டும் என அரசியலமைப்பின் 47வது பிரிவு அறிவுறுத்துகிறது.

அரசியலமைப்பின் கொள்கைகள், வழிகாட்டுதல்களை பின்பற்றும் ஒரு பொதுநல அரசாங்கம், மதுவிலக்கை அமல்படுத்த முழுமனதுடன் பாடுபட வேண்டும். ஒருபுறம் அதிக மருத்துவமனைகளை நிறுவுவதும், மறுபுறம் டாஸ்மாக் கடைகளை நிறுவுவதும் அரசியலமைப்பின் நெறிமுறைகளுக்கு ஏற்றதல்ல.

எனவே டாஸ்மாக் கடையை நிறுவும்போது தூர விதிகளை மட்டும் கணக்கில் கொள்வதை ஏற்க முடியாது. இந்த வழக்கை பொறுத்தவரை, திண்டுக்கல் நகரில் இருந்து திருச்சி செல்லும் சாலையை பயன்படுத்துபவர்கள், மாணவ, மாணவிகள், கிறிஸ்தவ ஆலயத்துக்கு செல்பவர்கள் உள்ளிட்ட பொதுமக்களுக்கு இந்த டாஸ்மாக் கடை இடையூறாக இருக்கும் என்பதில் எந்த சந்தேகமும் இல்லை.

ஒருடாஸ்மாக்கடையை மூடுவது எந்த தீங்கையும் விளைவிக்காது. மாறாக பொதுமக்களுக்கு பெருமளவில் பயனளிக்கும். அந்த வகையில் இந்த டாஸ்மாக் கடையை 2 வாரத்துக்குள் மூட வேண்டும். இவ்வாறு உத்தரவிட்டனர்.

# பழனி: வீச்சருவாளுடன் திரிந்த இருவர் கைது



திண்டுக்கல்: பழனியில் அரிவாளுடன் சுற்றித் திரிவதாக போலீசாருக்கு தகவல் கிடைத்தது. இதன் பேரில் டிஎஸ்பி தனஜெயன் உத்தரவின் பேரில் ஆய்வாளர்மணிமாறன்தலைமையில்சார்பு ஆய்வாளர்விஜய் குழுவினர் பொதுமக்களுக்கு அச்சுறுத்தும் வகையில் வீச்சருவாளுடன் சுற்றித்திரிந்த இருவரைக் காவல்துறையினர் கைது செய்தனர்.

# சென்னை சென்ட்ரல்சூலூர்பேட்டை இடையே மின்சார ரெயில்கள் ரத்து செய்யப்பட்டுள்ளது



சென்னை, ஜூன் 6

சென்னை சென்ட்ரல்சூலூர்பேட்டை இடையே பராமரிப்பு பணிகள் நடைபெறுவதால் மின்சார ரெயில்கள் ரத்து செய்யப்படுகின்றன என தெற்கு ரெயில்வே தெரிவித்துள்ளது. இது தொடர்பாக தெற்கு ரெயில்வே வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில்,

"சென்னை சென்ட்ரல்கூடூர் வழித்தடத்தில் உள்ள கவரப்பேட்டைகும்மிடிப்பூண்டி ரெயில் நிலையம் இடையே பராமரிப்பு பணி நடைபெறுவதால் இன்று (வியாழக்கிழமை) மற்றும் வருகிற 7ந்தேதி மின்சார ரெயில்கள் ரத்து செய்யப்படுகின்றன.

அதன்படி, சென்னை சென்ட்ரலில் இருந்து இன்று மற்றும் வருகிற 7ந்தேதி காலை 10.30, 11.35 மணிக்கு புறப்பட்டுகும்மிடிப்பூண்டிசெல்லும்மின்சாரரெயில்கள் ரத்து செய்யப்படுகின்றன. அதேபோல, கும்மிடிப்பூண்டியில் இருந்து மதியம் 1, 2.30, 3.15 மணிக்கு புறப்பட்டு சென்ட்ரல் வரும் ரெயில்களும் ரத்து செய்யப்படுகின்றன.

சென்னை சென்ட்ரலில் இருந்து இன்று காலை 10.15, மதியம் 12.10, 1.15 மணிக்கு புறப்பட்டு சூலூர்பேட்டை செல்லும் மின்சார ரெயில்கள் ரத்து செய்யப்படுகின்றன. அதே போல, சூலூர்பேட்டையில் இருந்து மதியம் 1, 1.15, 3.10 இரவு 9 மணிக்கு புறப்பட்டு சென்னை சென்ட்ரல் வரும் மின்சார ரெயிலும் ரத்து செய்யப்படுகின்றன.

சென்னை கடற்கரையில் இருந்து இன்று காலை 9.40, மதியம் 12.40, மணிக்கு புறப்பட்டு கும்மிடிப்பூண்டி செல்லும் மின்சார ரெயில்கள் ரத்து செய்யப்படுகின்றன. அதே போல, கும்மிடிப்பூண்டியில் இருந்து காலை 10.55 மணிக்கு புறப்பட்டு சென்னை கடற்கரைக்கு வரும் ரெயிலும் ரத்து செய்யப்படுகிறது.

சூலூர்பேட்டையில் இருந்து இன்று மதியம் 3.50 மணிக்கு புறப்பட்டு ஆந்திரமாநிலம் நெல்லூர்செல்லும் பயணிகள் ரெயிலும், நெல்லூரில் இருந்து மாலை 6.45 மணிக்கு புறப்பட்டு சூலூர்பேட்டை வரும் ரெயிலும் ரத்து செய்யப்படுகிறது. சென்னை சென்ட்ரலில் இருந்து இன்று இரவு 11.40 மணிக்கு புறப்பட்டு ஆவடி செல்லும் ரெயில் ரத்து செய்யப்படுகிறது." என தெரிவிக்கப்பட்டுள்ளது.

# இன்றைய ராசி பலன்கள் (6.6.2025)

**மேஷம்:** படைப்பு தொழில் மற்றும் கலைத் துறையில் இருப்பவர்களுக்கு புகழ் பெறக்கூடிய நாள். தொழிலில் புதிய முயற்சிகள் வெற்றி பெறும். குடும்ப உறுப்பினரின் உடல்நலத்தில் கவனம் தேவை.

**ரிஷபம்:** தொழில் வளர்ச்சி, பதவி உயர்வு, குடும்பத்தில் மகிழ்ச்சி நிறைந்த சூழ்நிலை உருவாகும். ஆன்மீக பயணங்கள் மற்றும் போட்டித் தேர்வுகளில் வெற்றி கிடைக்கும்.

**மிதுனம்:** புதிய வாய்ப்புகள் கிடைக்கும். உறவுகளில் நெருக்கம் அதிகரிக்கும். தொழிலில் முன்னேற்றம் காணப்படும்.

**கடகம்:** செலவுகள் அதிகரிக்கும், ஆனால் திட்டமிடல் மூலம் நன்மை கிடைக்கும். உணர்ச்சி மற்றும் மன அழுத்தம் அதிகரிக்க வாய்ப்பு உள்ளது.

**சிம்மம்:** சொத்து வழக்குகள் தீர்வு காணும், பங்குசந்தை முதலீடுகளில் லாபம், அலுவலகத்தில் மதிப்பு மற்றும் திருமண யோகம் கிடைக்கும். மாணவர்களுக்கு கல்விநிலை முன்னேறும்.

**கன்னி:** பிறருடன் கூடிப் பழகுவதில் உள்ள பயம் பதற்றமாக இருக்கலாம். அதை நீக்குவதற்கு தன்னம்பிக்கையை வளர்த்திடுங்கள். கமிஷன்கள், டிவிடெண்ட்கள் அல்லது ராயல்டிகள் மூலம் ஆதாயம் பெறுவீர்கள்.

**துலாம்:** வியாபார விருத்தி, நிதி மேம்பாடு, உடல்நல வளம் மற்றும் உறவுநிலை திசையமைவது என பல நன்மைகள் அமையும். காதல் உறவுகள் மேம்படும்.

**விருச்சிகம்:** தொழிலில் புதிய முயற்சிகள் விருப்பமாக அமையும், ஆனால் நிதியான அணுகுமுறை அவசியம். உறவுகளில்நெருக்கம்அதிகரிக்கும்.

**தனுசு:** தன்னம்பிக்கை அதிகரிக்கும், செலவு கட்டுப்பாடு தேவை. குடும்பத்தில்சவால்கள்ஏற்படலாம்.

**மகரம்:** தொழிலில் தடைகளை கடந்து நிம்மதிக்கு செல்வது. பணியிடத்தில் மேலதிகாரிகளின் ஆதரவு கிடைக்கும்.

**கும்பம்:** சதயம் நட்சத்திரக்காரர்களுக்கு சந்திராஷ்டமம் ஆதலால், சுபகாரியங்களை தள்ளி வைப்பது நல்லது.

**மீனம்:** தொழிலில் சுமை அதிகரிக்கும், நிதி பலவீனம், கடன்தவிர்க்க வேண்டிய நிலை. ஆன்மீக விழிப்புணர்வு அதிகரிக்கும்.

# குடும்ப தகராறில் மாமியார் மீது வெந்நீர் ஊற்றிய மருமகள்



கன்னியாகுமரி ஜூன் 6

கன்னியாகுமரி மாவட்டம் மார்த்தாண்டம் அருகே உள்ள பாகோடு மாதிக்காவிளையை சேர்ந்தவர் தேவராஜ். இவருடைய மனைவி மரிய ஜோய் (67 வயது). இவர்களுக்கு 2 மகன்கள் உள்ளனர். இதில் 2வது மகன் சந்தோஷ்குமார் மனைவி சைனிமோள் (35 வயது). இவருக்கும் மாமியார் மரியஜோய்க்கும் இடையே அடிக்கடி குடும்ப தகராறு ஏற்பட்டு வந்தது.

இந்த நிலையில் சம்பவத்தன்று மாமியார், மருமகள் இடையே தகராறு ஏற்பட்டது.

வாக்குவாதம் முற்றிய நிலையில் ஆத்திரமடைந்த மருமகள் சைனி மோள், மாமியாரை தகாத வார்த்தைகளால் பேசியதுடன் அடுப்பில் இருந்த வெந்நீரை எடுத்து அவர் மீது ஊற்றியுள்ளார். மேலும் ஆத்திரம் அடங்காமல் கையால் முதுகில் தாக்கி உள்ளார்.

இதில் காயமடைந்த மரியஜோயை குடும்பத்தினர் மீட்டு குழித்துறை அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்த்தனர். பின்னர் சிகிச்சைக்கு பிறகு அவர் வீடு திரும்பினார். இதுகுறித்து மரிய ஜோய் மார்த்தாண்டம் போலீசில் புகார் கொடுத்தார். அந்த புகாரின் பேரில் சைனி மோள் மீது மார்த்தாண்டம் போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

# திராவிட குடும்பத்தில் உள்ள மொழி என்று கமல் பேசியதை அரசியல் ஆக்கிவிட்டார்கள் அமீர்



மணிரத்னம் இயக்கத்தில் கமல்ஹாசன் நடித்துள்ள படம் 'தக் லைப்'. கேங்க்ஸ்டர் கதைக்களத்தில் ஆக்ஷன் டிராமாவாக உருவாகியுள்ள இப்படம் கமல்ஹாசனின் 234வது படமாகும். 1987ல் வெளியான 'நாயகன்' படத்திற்குப் பிறகு மணிரத்னம்கமல் கூட்டணியில் உருவாகியுள்ள இந்த படத்தின் இன்று உலகம் முழுவதும் வெளியாகி உள்ளது. இந்த படத்தில் சிலம்பரசன், திரிஷா, அபிராமி, ஐஸ்வர்யா லட்சுமி, அசோக் செல்வன், ஜோஜு ஜார்ஜ், அலி பசல் உள்ளிட்டோர் நடித்துள்ளனர். மெட்ராஸ் டாக்கீஸ், ராஜ்கமல் பிலிம்ஸ் இன்டர்நேஷனல் மற்றும் ரெட் ஜெயன்ட் மூவிஸ் நிறுவனம் இணைந்து தயாரித்துள்ள இப்படத்திற்கு ஏ.ஆர்.ரகுமான் இசையமைத்துள்ளார்.

சமீபத்தில் நடந்த 'தக் லைப்' படத்தின் இசை வெளியீட்டு விழாவில் கன்னடம் , தமிழிலிருந்து உருவானது என்று கமல்ஹாசன் கூறியதற்கு கர்நாடகாவில் கடுமையான எதிர்ப்புகள் எழுந்துள்ளன. இந்த விவகாரம் கோர்ட்டு வரை சென்றது.இந்தவழக்குதொடர்பானவிசாரணையில்,கர்நாடகாவில்'தக்லைப்'படத்தின்வெளியீடுஒத்திவைக்கப்படுவதாக கமல்ஹாசன் தரப்பு வாதிட்டதையடுத்து, பட வெளியீடு ஒத்திவைக்கப்படுவதால் வழக்கு விசாரணையை ஜூன் 10ம் தேதிக்கு ஒத்திவைக்கிறோம் என கர்நாடக ஐகோர்ட்டு தெரிவித்தது.

'தக் லைப்' திரைப்படத்தை பார்க்கவந்த இயக்குநர் அமீர், "என்னுடைய முதல் திரைப்படமான 'மௌனம் பேசியதே' இசைவெளியீட்டுவிழாவின்போதுகமல்மணிரத்னம்இருவரும்பங்கேற்றார்கள்.அதுநடந்துகிட்டத்தட்ட23வருடங்கள் ஆகிவிட்டது, அப்போதே நான் அவர்களிடம் உங்கள் இருவரின் கூட்டணியில் மீண்டும் திரைப்படம் எப்போது பார்க்கலாம் என்று கேட்டேன். அதற்கு மணி சாரிடம் கேளுங்கள் என்று கமல் சார் சொன்னார். கிட்டத்தட்ட 23 வருடங்கள் கழித்து அவர்கள் கூட்டணியில் ஒரு படம் வெளியாகியுள்ளது. நான் எப்படி நாயகனை ஒரு ரசிகனாக திரையரங்கில் சென்று பார்த்தனோ, அதேபோல ஒரு ரசிகனாக தான் இந்த திரைப்படத்தையும் பார்க்க வந்துள்ளேன்" என்று பேசினார்.

பின்னர் கமல் விவகாரம் குறித்து கேள்விகளுக்கு பதிலளித்து பேசிய அவர், "கமல் எந்த மொழியையும் குறைத்தும் பேசவில்லை, தவறாகவும் பேசவில்லை. திராவிட குடும்பத்தில் உள்ள மொழி என்று தான் கமல் பேசினார். அது கர்நாடக மக்கள், சிவராஜ் குடும்பத்தினர் என அனைவராலும் சரியான அர்த்தத்துடன் தான் புரிந்துகொள்ளப்பட்டது. ஆனால் அதை அரசியல் செய்யணும்னு நினைக்குற சில கர்நாடக அமைப்புகள் பெரிதாக மாற்றிவிட்டார்கள்" என்று கூறினார்.

# "ஜென்ம நட்சத்திரம்" படத்தின் டீசர் வெளியீடு




கடந்த 2024 ஏப்ரல் மாதத்தில் 'ஒரு நொடி' எனும் திரைப்படம் வெளியானது. இந்த படத்தில் தமன்குமார் கதாநாயகனாக நடித்திருந்தார். இவருடன் இணைந்து வேல ராமமூர்த்தி, எம்.எஸ். பாஸ்கர், தீபா சங்கர் மற்றும் பலர் முக்கிய கதாபாத்திரங்களில் நடித்திருந்தனர். கிரைம் திரில்லர் ஜானரில் மணிவர்மன் இயக்கத்தில் வெளியான இந்த படம் ரசிகர்கள் மத்தியில் நல்ல வரவேற்பை பெற்று பல்வேறு தரப்பினர் இடையே பாராட்டுக்களை பெற்றது.

இந்நிலையில் மணிவர்மன் – தமன்குமார் கூட்டணி மீண்டும் ஒரு புதிய படத்தில் இணைந்துள்ளது. இந்த படத்திற்கு 'ஜென்ம நட்சத்திரம்' என்று தலைப்பு வைக்கப்பட்டிருக்கிறது. இந்த படத்தில் தமன்குமாருக்கு ஜோடியாக மால்வி மல்கோத்ரா நடித்துள்ளார். மேலும் இவர்களுடன் இணைந்து காளி வெங்கட், முனீஷ்காந்த், தலைவாசல் விஜய், வேல ராமமூர்த்தி மற்றும் பலர் நடித்திருக்கின்றனர்.

இந்த படத்தை அமோகம் ஸ்டுடியோஸ் நிறுவனம் தயாரித்திருக்கிறது. ஹாரர் சம்பந்தமான கதைக்களத்தில் உருவாகும் இந்த படத்தின் பர்ஸ்ட் லுக் போஸ்டர் வெளியாகி ரசிகர்களின் கவனம் பெற்று இணையத்தில் வைரலானது.

இந்நிலையில் 'ஜென்ம நட்சத்திரம்' படத்தின் டீசரை படக்குழு வெளியிட்டுள்ளது. திரைப்படம் விரைவில் வெளியாக உள்ளதாக படக்குழு அறிவித்துள்ளது.

# அதர்வாவின் "டி.என்.ஏ" ரிலீஸ் தேதி அறிவிப்பு

பாணா காத்தாடி படத்தின் மூலம் தமிழ் சினிமாவில் கதாநாயகனாக அறிமுகமானவர் அதர்வா முரளி. பரதேசி, இமைக்கா நொடிகள், சண்டி வீரன், ஈட்டி போன்ற படங்களில் தனது சிறப்பான நடிப்பை வெளிப்படுத்தி தனக்கென தனி ரசிகர்களை கொண்டவர் நடிகர் அதர்வா.

இயக்குநர் நெல்சன் வெங்கடேசன் இயக்கத்தில் அதர்வா முரளி 'டி.என்.ஏ' திரைப்படத்தில் நடித்துள்ளார். கடந்த 2016ம் ஆண்டு தினேஷ், மியா ஜார்ஜ், நிவேதா பெத்துராஜ் நடிப்பில் வெளியான 'ஒரு நாள் கூத்து திரைப்படத்தின் மூலம் இயக்குனராகஅறிமுகமானவர்நெல்சன்வெங்கடேசன்.அதன்பின்னர்'மான்ஸ்டர்','பர்ஹானா'போன்றதிரைப்படங்களை இயக்கி வரவேற்பை பெற்றார். ஒலிம்பியா மூவிஸ் நிறுவனம் இப்படத்தை தயாரித்து வருகிறது. சித்தா படத்தின் மூலம் கவனத்தை ஈர்த்த நிமிஷா சஜயன் இப்படத்தில் கதாநாயகியாக நடிக்கிறார். அதர்வா முரளியின் பிறந்தநாளை முன்னிட்டு இந்த படத்தின் பர்ஸ்ட் லுக் போஸ்டரை படக்குழு வெளியிட்டது. 'டி.என்.ஏ' படம் ஆக்சன் திரில்லர் பாணியில் உருவாகியுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது. இப்படத்தில் முக்கிய அம்சம் என்னவெனில் இதில் இடம்பெற்றுள்ள 5 பாடல்களும் 5 வெவ்வேறு இசையமைப்பாளர்களால் உருவாக்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

இந்த நிலையில் 'டி.என்.ஏ' படம் வரும் 20ந் தேதி வெளியாக உள்ளதாக படக்குழு அறிவித்துள்ளது.

குபேரா படமும் டி.என்.ஏ படமும் 20ந் தேதி தேதி திரைக்கு வர உள்ளதால், 2 படத்துக்கும் இடையே போட்டி அதிகமாக இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

# இந்தோனேசிய ஓபன்: சாத்விக் சிராக் ஜோடி காலிறுதிக்கு தகுதி



இந்தோனேசிய ஓபன் பேட்மிண்டன் போட்டி தலைநகர் ஜகர்த்தாவில் நடந்து வருகிறது. இதில் இதில் ஆண்கள் இரட்டையர் பிரிவின் 2வது சுற்று ஆட்டத்தில் இந்தியாவின் சிராக் ஷெட்டிசாத்விக் ரங்கி ரெட்டி ஜோடி, டென்மார்க்கின் ராஸ்மஸ் க்ஜோர்பிரடெரிக் சோகார்ட் ஜோடியுடன் மோதியது.

பரபரப்பான இந்த ஆட்டத்தில் சிறப்பாக விளையாடி ஆதிக்கம் செலுத்திய இந்த போட்டியில் முதல் செட்டை இழந்த இந்திய ஜோடி அடுத்த இரண்டு செட்டை கைப்பற்றியது. இதனால் 16-21, 21-18, 22-20 என்ற செட் கணக்கில் இந்திய ஜோடி வெற்றி பெற்று காலிறுதிக்கு முன்னேறியது.

# இந்தோனேசிய ஓபன் பேட்மிண்டன்: பி.வி. சிந்து தோல்வி



இந்தோனேசியா ஓபன் சூப்பர் சீரிஸ் பேட்மிண்டன் போட்டி ஜகர்த்தாவில் நடந்து வருகிறது. இதில் பெண்கள் ஒற்றையர் பிரிவில் இன்று நடைபெற்ற இரண்டாவது சுற்று ஆட்டத்தில் ஒலிம்பிக்கில் 2 பதக்கம் வென்றவரான இந்திய வீராங்கனை பி.வி. சிந்து, உலகின் 8வது இடத்தில் உள்ள தாய்லாந்து வீராங்கனை போர்ன்பாவீ சோச்சுவோங்குடன் மோதினார்.

1 மணி 18 நிமிடங்கள் நடைபெற்ற இந்த ஆட்டத்தில் பி.வி. சிந்து 2220, 1021, 1821 என்ற செட் கணக்கில் சோச்சுவோங்கிடம் தோல்வியடைந்தார். தோல்வி குறித்து பேசிய பி.வி. சிந்து, "மூன்றாவது செட்டில் நான் 1613 என முன்னிலையில் இருந்தேன். அதை நான் வெற்றியாக மாற்றியிருக்க வேண்டும் என்று நினைக்கிறேன்.

ஆனால் ஒட்டுமொத்தமாக எனது ஆட்டத்தில் நான் மகிழ்ச்சியடைகிறேன். இந்த போட்டியிலிருந்தும் இந்த தொடரிலிருந்தும் கற்றுக்கொள்ள நிறைய இருக்கிறது" என்று கூறினார்.

# அன்பை பகிர நடத்தப்பட்ட நிகழ்ச்சி பேரிழப்பாக மாறிவிட்டது: குருனல் பாண்டியா வருத்தம்



18வதுஐ.பி.எல்.கிரிக்கெட்போட்டிநேற்றுமுன்தினம் இரவு நிறைவுபெற்றது. இதன் இறுதிப்போட்டியில் பஞ்சாப் கிங்ஸ் அணியை வீழ்த்தி ராயல் சேலஞ்சர்ஸ் பெங்களூரு வெற்றி பெற்றது. ஐ.பி.எல். வரலாற்றில் பெங்களூரு அணி கோப்பையை வெல்வது இதுவே முதல்முறை.இதனால்அந்தஅணிரசிகர்கள்மட்டுமின்றி, கர்நாடக மக்களும் அந்த வெற்றியை உற்சாகமாக கொண்டாடினர்.

இதையடுத்து, கோப்பையை வென்ற பெங்களூரு அணியின்வீரர்களுக்குகர்நாடகஅரசுசார்பில்பெங்களூரு விதானசவுதாவிலும் (சட்டசபை வளாகம்), பெங்களூரு அணி நிர்வாகம் சார்பில் பெங்களூரு சின்னசாமி கிரிக்கெட் மைதானத்திலும் பாராட்டு விழாவுக்கு ஏற்பாடு செய்யப்பட்டது.

இதையொட்டி சின்னசாமி மைதானத்திற்கு ரசிகர்கள் அதிக அளவில் திரண்டு வந்தனர். சிறுவர், சிறுமிகள், இளம்பெண்கள் என ஆயிரக்கணக்கானோர் திரண்டு வந்தார்கள். இதனால் அங்கு கடும் கூட்ட நெரிசல் உண்டானது.நெரிசலில் சிக்கி 11 பேர் உயிரிழந்தனர். இந்த சம்பவம் நாட்டையே உலுக்கியுள்ளது. போதிய முன்னேற்பாடுகள் இன்றி வெற்றிக்கொண்டாட்டத்திற்கு ஏற்பாடு செய்ததே இந்த துயர நிகழ்வுக்கு காரணம் என்று சொல்லப்படுகிறது. இந்த துயர சம்பவத்திற்கு பலர் இரங்கல் தெரிவித்து வருகின்றனர்.

இந்நிலையில், கூட்ட நெரிசலில் சிக்கி 11 பேர் உயிரிழந்த சம்பவத்திற்கு பெங்களூரு வீரர் குருனல் பாண்டியா வருத்தம் தெரிவித்துள்ளார். இது தொடர்பாக அவர் கூறியதாவது, அன்பை பகிர்வதற்காக நடத்தப்பட்ட நிகழ்ச்சி, ஒரு பேரிழப்பாக மாறிவிட்டது. உயிரிழந்தவர்களின் குடும்பங்களுக்கு ஆழ்ந்த இரங்கல். காயமடைந்தவர்கள் விரைவில் நலம் பெற பிரார்த்திக்கிறேன்.என தெரிவித்துள்ளார்.

NAMADHU DHINA KANI
Canara Bank
Account: 120028528266
IFSC code: CNRB0001041

Printed by KANIRAJA V. published by KANIRAJA V. on behalf of NAMADHU DHINA KANI TAMIL DAILY and printed at SEAMAN GRAPHICS No. 7/253, KVN puram 2 2nd street, KilpaukGarden, Chennai 600010. and published at No.28, Thalikattipalayam, Kaithamalai Road, Uttukuli, Tiruppur - 638751. Editor: KANI RAJA V.